விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 32 மாசி: 14 றஜபு பிறை: 29 இதழ்: 13
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 26-02-1990

University of Jaffna Sri Lanka
RECEIVED
0-2-26
Periodicals Division
Library

## "ஈழவிடுதலைப் போராட்டத்தில் பெண்கள் முழுமையாகப் பங்குபெறவேண்டும்"

### - செல்வி ஆர்த்தி

(யாழ்ப்பாணம்)
'தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு முற்போக்கான இயக்கம். எந்த இன்னல்களுக்கும் தளும்பாது உறுதியாக நின்றபடியால்தான் இன்று மக்கள் முன் துணிவாக வந்துள்ளோம். உலகத்திலேயே நான்காவது பெரிய

(8ம் பக்கம் பார்க்க)

## வடபிரதேச மக்கள் வங்கியினால் வடபிராந்தியத்தில் 272 கடன் வழங்கும் முகவர்கள் நியமிப்பு

(யாழ்ப்பாணம்)
வட பிரதேச மக்கள் வங்கி 272 சமூகக் கடன் வழங்கும் முகவர்களை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் நியமித்துள்ளது.
இவர்களில் 232 முகவர்கள், 8 லட்சத்து 88 ஆயிரம் ரூபா

(8-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கில் இந்திய அமைதிப்படையினரின் மனிதஉரிமைமீறல்சம்பவங்கள்

## உலகநாடுகளின் கவனத்துக்கென நெடுமாறன் தகவல் சேகரிப்பு!

[யாழ்ப்பாணம்]

**வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இந்திய அமைதிப்படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல் சம்பவங்கள் உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும். குறிப்பாக லண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்புச் சபைக்கும், மனித உரிமைகள் சங்கத்திற்கும் சமர்ப்பிக்கப்படும். இதற்கான நடவடிக்கைகளைத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் மேற்கொண்டு வருகிறார்.**

**இதன் பொருட்டு அவர் வடக்கு - கிழக்கிலுள்ள பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து தேவையான விபரங்களைத் துரிதமாகச் சேகரித்து வருகிறார்.**

வடக்கு - கிழக்கு பகுதியில் இந்திய அமைதிப் படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல் நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பொது மக்களிடமிருந்து திரு. ப. நெடுமாறன் விபரங்களை சேகரித்து வருகிறார்.

மேற்படி விபரங்களை தாம் லண்டனிலுள்ள சர்வதேச மன்னிப்பு சபைக்கும் மனித உரிமைகள் கழகத்திற்கும் மற்றும் பல உலக நாடுகளுக்கும் அனுப்பப்போவதாகவும் தமிழ் மக்கள் மீது அமைதிப் படையினர் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களை இந்திய அரசிடம் சமர்ப்பிக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதன் ஒரு கட்டமாக திரு. ப. நெடுமாறன் நேற்று நண்பகல் முதல் மாலைவரை காரைநகரின் பலபகுதிகளுக்கும் சென்று அமைதிப்படையினரால் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடமிருந்து விபரங்களை சேகரித்தார். இதன் போது பல பொதுமக்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் பொலிஸ் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை

(மன்னார்)
மன்னாரில் புதிய பொலிஸ் நிலையங்கள் பின்வரும் இடங்களில் நிறுவப்படவுள்ளன. அடம்பன், பேசாலை, விடத்தல்தீவு, சிலாவத்துறை போன்ற இடங்களில் எதிர்வரும் சித்திரை மாதம் முதல் இந்த பொலிஸ் நிலையங்கள்

(8ம் பக்கம் பார்க்க)

## அப்பியாசக்கொப்பி தட்டுப்பாட்டை நீக்க அரசு நடவடிக்கை

[கொழும்பு]
அப்பியாசக் கொப்பியின் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் விதமாக அப்பியாசக் கொப்பி உற்பத்திக்கென 500 மெட்றிக் தொன் கடதாசியை அரசாங்கம் கையிருப்பில் வைத்திருக்கிறது.

வருடம் ஒன்றுக்கு ஐந்து கோடி அப்பியாசக் கொப்பிகள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தற்போது நான்கு கோடி 38 லட்சம் அப்பியாசக்

(8ம் பக்கம் பார்க்க)

## தேசவிடுதலையில் நாம் ஒவ்வொருவரும் இணைந்து பங்கெடுக்கவேண்டும்

### - சிவபாலன்

[யாழ்ப்பாணம்]
"தேச விடுதலையில் நாம ஒவ்வொருவரும் இணைந்து பங்கெடுப்பதன் மூலம் நமது விடுதலையை விரைவாக அடைய முடியும்.

தமிழ்ப் பிரதேசங்களில் இன்று உருவாகியுள்ள அமைதி தற்காலிகமானதே. எமது மண்ணையும் மக்களையும் நிரந்தரமாகப் பாதுகாத்து தேச விடுதலையை நிலைநாட்டுகின்றபோதே நாம் பூரணமான அமைதியைக் காணமுடியும்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அவைத் தலைவர் சிவபாலன் நாச்சிமார் கோவில் முன்றலில் நடைபெற்ற ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட அஞ்சலிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு மாவட்டத்தில் நெல் விலை வீழ்ச்சி

(ஒட்டுசுட்டான்)
முல்லைத்தீவு மாவட்டத்தில் அமோக நெல் விளைச்சலை விவசாயிகள் பெற்றுள்ளனர்.

இதேவேளை, ஆரம்பத்தில் ஒரு மூடை நெல் (69 கிலோ) 550-00 ரூபாவாக விவசாயிகளிடம் வர்த்தகர்கள் கொள்வனவு செய்துவந்தனர்.

தற்பொழுது திடீரென நெல்லின்விலைவீழ்ச்சியடைந்து ஒரு மூடை நெல் 475-00 ரூபாவாக விற்பனையாகிறது.

## ராஜீவ் ஜெயலலிதாவை சந்தித்தார்

(சென்னை)
கார் விபத்தில் நேற்று முன் தினம் சிக்கிக் காயமடைந்த அனைத்து இந்திய அண்ணா திராவிடக் கழகப் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவை இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ராஜீவ் காந்தி வைத்தியசாலைக்கு நேரில் சென்று உடல் நலம் விசாரித்தார்.

## இரு குழந்தைகளுக்கு நஞ்சூட்டி தானும் நஞ்சருந்தி இளம் தாய் தற்கொலை

[யாழ்ப்பாணம்]
கணவனை இழந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன் தினமிரவு தன் இருகுழந்தைகளுக்கும் கிருமிநாசினியைக் குடிக்கக் கொடுத்து, தானும் அதனை அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

குழந்தைகளில் ஒருகுழந்தை மரணமாகிவிட்டது. மற்ற குழந்தை ஆபத்தான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் தீவிர சிகிச்சைக்குட்படுத்தப் பட்டுள்ளது.

பலாலி கிழக்கு அம்மன் கோவிலடியைச் சேர்ந்த புவனேஸ்வரி இரத்தினம் [வயது 26] என்ற பெண்ணும் அவரது கடைசிக் குழந்தையான இரத்தினம் மயூநேசன் என்ற மூன்று வயது ஆண்குழந்தையுமே மரணமானவர்களாவர்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது, சுமார் நான்கு மாதங்களுக்குமுன் இறந்தவரின் கணவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் அன்றிலிருந்து இப்பெண் மனவிரக்தி

(8-ம் பக்கம் பார்க்க)

வடமராட்சியில்

## தனியார் கல்வி நிறுவனங்களில் சீரான கட்டணம் அறவிடமுடிவு

[புலோலி]
வடமராட்சிப்பகுதியிலுள்ள தனியார் கல்வி நிலையங்கள் எதிர்வரும் மார்ச்மாதம் முதல் மாணவர்களிடம் ஒரே சீரான கட்டணத்தை அறவிட முடிவு செய்துள்ளன.

வடமராட்சி தனியார் கல்வி நிலைய ஒன்றியக் கூட்டம் திரு. பி. வியாகேஸ் தலைமையில் நெல்லியடி மொடேர்ன் எடியூகேசன் சென்றறில் அண்மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தனியார் கல்வி நிலையங்கள் ஒரே சீரான கட்டணத்தை அறவிட வேண்டும் என விடுக்கப்பட்ட கோரிக்கை ஆராயப்பட்டது. இறுதியில் ஒரே சீரான கட்டணத்தை அறவிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்பிரகாரம் க.பொ.த. உயர்தர விஞ்ஞான வகுப்பு

(8ம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு தேசப்பிரேமி விருது!

(கொழும்பு)
யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 150 மாணவர்களுக்கு தேசப்பிரேமி விருதுகள் வழங்கப்பட்டன.

குறைந்த வருமானங்களையுடைய குடும்பங்களைச் சேர்ந்த க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கே இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

அம்பலாங்கொட தேசப்பிரேமி சங்கத்தினர் 5-வது வருட நிறைவு விழாவையொட்டி இங்குநடந்த வைபவமொன்றிலே இவ்விருது வழங்கப்பட்டது, (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

பிரபல்யமான மின்தறி நெசவாலைக்கு பயிற்சிபெற்ற மின்தறி நெசவாளர்கள் மற்றும்பயிலுநர்கள் தேவை. தகுதி அடிப்படையில் சிறந்த சம்பளம் வழங்கப்படும். விண்ணப்ப முடிவு திகதி 15-3-90-க்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்: விளம்பர இல: சி 3527 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

(சி 3527)

### தவறிவிட்டது

எனது அடையாள அட்டை இலக்கம்: 650521919 23-2-90 அன்று இரவு மானிப்பாய் வீதியில் தவறிவிட்டது. இதை கண்டெடுப்பவர்கள் பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். விலாசம்: மு. ரவீந்திரன், 239, கடற்கரை வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

(சி-3530)

### மணமகள் தேவை

யாழ். கிறிஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்த 40 வயது தொழில்நுட்பவியலாளராக வெளிநாட்டுக் கம்பனியில் கடமை புரியும் 5' 4'' உயரமுள்ள நற்குணமுள்ளவரும், மாதாந்தம் ரூபா 5000/- சம்பளம் பெறுபவருக்கு 5' 2'' உள்ள 30 வயதிற்குட்பட்ட அழகிய மணப்பெண் தேவை. முதல் கடிதத்தில் எல்லா விபரமும் எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்பு: விளம்பர இலக்கம் 3399. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.

சி-3399

## பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் அனோசுஜிதன்

நாரந்தனை தெற்கைச் சேர்ந்த குகநாதன்—றஜனி தம்பதிகளின் செல்வப் புதல்வன் அனோசுஜிதன் தனது ஐந்தாவது பிறந்த தினத்தை இன்று [26-2-90]பரீஸ் நகரில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். தனது டடி மம்மியுடன் பிறந்த தினத்தைக் கொண்டாடும் சுஜி பல்கலையும் பெற்று சிறப்புற்று வாழ நாரந்தனையிலுள்ள அம்மா, அப்பா கரம்பனிலுள்ள அப்பம்மா மற்றும் உற்றார் உறவினர்கள் அன்புடன் வாழ்த்துகின்றனர்.

செ. பீற்றர்,
நாரந்தனை.

[சி-3528]

### யாழ். உ. அ. அதிபர் பிரிவில்

# ஆசிரியர் பயிலுநர் தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆசிரியர் பயிலுநராக 93 பேர் தெரிவாகியுள்ளனர். இவர்களில் ஆரம்பக் கல்வி 24, புத்த சமயம் 01, இந்து சமயம் 02, கிறிஸ்தவம் 03, இஸ்லாம் 03, கிறிஸ்தவம் அல்லாதது 03, சிங்களம் 02, தமிழ் 04, மனைப்பொருளியல் 01, வர்த்தகம் 05, தட்டெழுத்து 01, மரவேலை 01. வானொலி திருத்துதல் 01, மட்பாண்டவேலை 01, கணிதம் 01, விஞ்ஞானம் 02, ஆங்கிலம் 6, உடற்கல்வி 02, சித்திரம் 08, சங்கீதம் 07, நடனம் 09, விவசாயம் 02, முஸ்லிம் பாடசாலைகளுக்கு 04 பேரும் தெரிவாகியுள்ளனர். இவர்களது சுட்டிலக்கம் பெயர் விலாசம் பெற்ற புள்ளிகள் (அடைப்புக் குறிக்குள்) கீழே தரப்படுகின்றன. மேன்முறையீடுகள் மார்ச் மாதம் 2ந் திகதிக்கு முன் தெரிவிக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி

1040 ச. ரஞ்சினிதேவி கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் (758), 990 இ. இந்திராணி ஈச்சாமட்டை வீதி யாழ்ப்பாணம் (736), 003 யு. இ. பிரட்றிக் மாட்டின் வீதி யாழ்ப்பாணம் (674), 478 ச. குயின்வெயின் குருநகர் (669), 556 செ. கீதா மத்தியூஸ் லேன் யாழ்ப்பாணம் (666), 104 சு. ரியூ டோர் கிறிவ்லண்ட் சென் அன்ரனிஸ் வீதி யார்ழ்ப்பாணம் (651), 100 நா. யெய்சிலின் ரமி சென் பற்றிக்ஸ் வீதி யாழ்ப்பாணம் (643), 275 ம. கேதாரகௌரி கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் (637), 994 செ. மதிய அழகேஸ்வரி ராசலிங்கம் வீதி யழ்ப்பாணம் (623), 016 ப. அம்பிகை 2ம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் (618), 135 வி. மு. பிரமிளா விதானையார் வீதி யாழ்ப்பாணம் (610), 443 மரியா லோரன்சியா பாஷையூர் (610), 342 இ. சிவபுரத்தரசி கில்னர் ஒழுங்கை யாழ்ப்பாணம் (609), 903 அ. பிரமிளா சிவன்பண்ணைவீதி யாழ்ப்பாணம் (607), 346 திருமதி க. நளாயினி சீனிவாசகம் வீதி யாழ்ப்பாணம் (603), 952 இ. ஊர்மிளா புதிய வீதி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம் (606), 014 பொ. கலாநாயகி கொழும்புத்துறை யாழ்ப்பாணம் (597), 437 திரேவதி விதானையார் வீதி யாழ்ப்பாணம் (586), 187 இ. நிரஞ்சலா பலாலிவீதி யாழ்ப்பாணம் (578), 636 க. புவிராஜசிங்கம் கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம் (576), 917 த. ஜெயந்தி கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் (576), 001 க. சாந்தினி சீனிவாசகம் வீதி யாழ்ப்பாணம் (574), 172 மேரி ஜெஸ்மின் 4ம்குறுக்குத் தெரு யாழ்ப்பாணம் (567), 879 க. சசிகலா நாவலர் வீதி யாழ்ப்பாணம் (562).

புத்த சமயம்

0115 ச வசயா கடற்கரை வீதி குருநகர் (562).

இந்துசமயம்

156 கே. கனகலிங்கம் யாழ் வீதி யாழ்ப்பாணம் (573), 206 சுகிர்தமேரி கோபால் வீதி யாழ்ப்பாணப் (565).

இஸ்லாம்

078 மு. அ. பஸீல் கிருச் மாவடி வீதி யாழ்ப்பாணம் (515), 080 அ த. அறஃமுகமது நசீர் முஸ்லிம் கல்லூரி வீதி யாழ்ப்பாணம் (512), 076 த. அமிரா கமால் வீதி யாழ்ப்பாணம் (491).

கிறிஸ்தவம் (றோ. க)

419 ரூ. மரிய கொற்றறி மவுண்ட் கமால் வீதி யாழ்ப்பாணம் (613), 473 மேரி அன்சலா குருநகர் (596), 973 போ. பிறசிட்லூறு பாஷையூர் (593).

கிறிஸ்தவம் [றோ. க. அல்லாது

449 செ. அ. செ. கிறீஸ்தோப்பர் மவுண்ட் கமால் வீதி யாழ்ப்பாணம் (613), 0114 மை. ஞானேந்திரன் புங்கங்குளம் வீதி யாழ்ப்பாணம் (434), 113 ம. க. ச ஆசீர்வாதம் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் (420).

சிங்களம்

116 கு. ஜோசப் அனுரா வேம்படி வீதி யாழ்ப்பாணம் (375), 117 என. ரஞ்சன் கலைப்புலவர் வீதி யாழ்ப்பாணம் (332).

தமிழ்

449 டே. மரீனு 1ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் (694), 010 ப. சாந்தினி ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் (601), 015 கி. மெனிற்று ரஜனி குருநகர் யாழ்ப்பாணம் (589), 474 த. கலாமதி முஸ்லிம் கல்லூரி வீதி யாழ்ப்பாணம் (566).

கணிதம்

544 க. முத்துலிங்கம் மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம் (592)

விஞ்ஞானம்

059 மே. பொ. அ. அல்போன்ஸ், இராஜேந்திராவீதி, யாழ்ப்பாணம் (615)

0174 செ. வை. மதிவதனி, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் (599)

ஆங்கிலம்

140 மா. சிவநேசம், சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். (6-8)

327 அ. தேன்மொழி, வண்ணார்பண்ணை. (622)

142 கே. பி. பத்மசரஸ்வதி, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (600)

165 ஜே. அல்டமோனியா சாமினி, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (588)

218 க. மாலனு விதானையார் வீதி, யாழ்ப்பாணம். (583), 410 பி தே. சி. நவமணி, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (580)

உடற்கல்வி

351 இ. பாலேஸ்வரி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (639), 010 ஜக்குவின் றேஸ், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (630), 130 செ. அனுராதா, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் (604), 005 கு மாலினி, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம். (576)

சமூகக்கல்வி

269 கு. கமலினி, விதானையார் வீதி, யாழ்ப்பாணம். (589). 026 மு பி. மேரிசுபா, கொழும்புத்துறை. (571),

சித்திரம்

216 மேரி றேசலன், சோமசுந்தரம் வீதி. யாழ்ப்பாணம். (628), 225 ந. சத்தியதேவி ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (606), 169 த. சாந்தினிதேவி ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (590), 168 வே. உஷாகுமாரி, 2-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (565), 0180 மே. பெஞ்சமின் ராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம். (539), 790 கி. விஜயராணி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (498), 178 பூ. ச பிறீடடோ விநாயகர் வீதி, யாழ்ப்பாணம் (492), 907 நீ. ரஞ்சனி, 2-ம் குறுக்குத்தெரு வீது, யாழ்ப்பாணம். (491)

சங்கீதம்

200 இ. சியாமளா, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம். (750), 199 ஆர். தயாநிதி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். (684), 002 நா. நிர்மலா தேவி, யாழ்வீதி, யாழ்ப்பாணம். (669), 183 க. அமிர்தாஞ்சலி, சுவாயார் வீதி, யாழ்ப்பாணம். (664), 344 இ கௌரி, சீனிவாசகம் வீதி, யாழ்ப்பாணம் (661), 465, ஐ. மாக்கிரட், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்: (631), 382, யோ. மௌலிதிரேசா, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (572)

நடனம்

185 க. மதீஸ்வரி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (625), 548 ச. ஆனந்தி, கில்னர் லேன். யாழ்ப்பாணம். (564), 1087 ஆ. சு. சுரபி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (575), 1190 என. பாமனு, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (547), 1109 கிரீஜா ஜொவிற்று, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் (494), 205, ரஞ்சிதகலா மூத்ததமபி, அவன்யூ, யாழ்ப்பாணம். (476), 1090 ச. ஆனந்தி, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம். (468), 212 அனற்ஐஷங்கி, கதீறறல் வீதி, யாழ்ப்பாணம். (449), 211 அ. கோ. மரியதாசன், விதானையார் வீதி, யாழ்ப்பாணம். (415).

விவசாயம்

546 அ. பிரான்சிஸ், பாஷையூர். [604], 214 ரெஜினோல்ட், நிமலன், மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். (420);

மனைப்பொருளியல்

060 க. அருணு கோவில்வீதி நாவாந்துறை யாழ்ப்பாணம் (636).

வர்த்தகம்

264 ம. கமலா கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாஊம் (599) 184 இ. ஜெயந்தி. யாழ்வீதி, யாழ்ப்பாணம். [578], 374 மேரி யசீதரா, பழைய வீதி, யாழ்ப்பாணம். (271), 162 எஸ். முத்துலட்சுமி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [570], 161 மேரி ஸ்ரெலா யூஜீன், கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (568),

தட்டச்சு

418 கிறிஸ்துகமலா, டேவிட் வீதி, யாழ்ப்பாணம். [619]

மரவேலை

1162 ம. யோசெப்கப்றுல் கோவில் வீதி யாழ்ப்பாணம், [303]

வானொலி திருத்துதல்

496 வ. தயாபாலன் நாவலர் வீதி யாழ்ப்பாணம், (635)

மட்பாண்டம்

241 கே. துஷ்யந்தி 134 நாவலர் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம் [572],

முஸ்லிம் பாடசாலைகளுக்கு

ஆரம்பக் கல்வி

671 ஜனுப் அப்துல் ஜவாத் ஜெசீமனு முஸ்லிம் கல்லூரி வீதி யாழ்ப்பாணம் [563], 680 ஜனுபா த. ருரேகா - 139 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம் [561],

ஆங்கிலம்

087 அ. கா. முகம்மது மன்சிலா நாவாந்துறை வீதி யாழ்ப்பாணம் [640],

சமூகக்கல்வி

714 அ. க. கம்சியா ஆஸாத் வீதி யாழ்ப்பாணம் [535],

(12)

## திருத்த வேலைகள்

(அச்சுவேலி)

நாடு சீராக வருகின்ற படியால். அச்சுவேலிப் பகுதியில் மின்சாரப் பகுதியினர் பல திருத்த வேலைகளைச் செய்து வருகின்றார்கள். புதிதாக தெரு விளக்கு போடப்பட்டும், பஸ் நிலையப் பகுதிக்கு 'ரியூப் லைற்' றும் இணைக்கப்பட்டும் வருகின்னர் என்பது குறிப்பிடத்தக்கது.

[ம]

## தேனீ வளர்ப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தேனீ வளர்ப்பில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு விரைவில் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

இதற்கான முயற்சிகளை வவுனியா மாவட்ட விவசாய விஸ்தரிப்பு உதவிப்பணிப்பாளர் திரு. கிருஷ்ணர் மேற்கொண்டுள்ளார்.

## இருமாடி கட்டிடத்திற்கு அடிக்கல்

(வேலணை)

வேலணை சரஸ்வதி வித்தியாலயத்திற்கு புதிய இருமாடிக்கட்டிடமொன்று கட்டுவதற்கான அத்திவாரக்கல்லை வேலணை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. புலேந்திரன் நாட்டிவைத்தார்.

இந்த அடிக்கல் நாட்டு விழாவிற்கு கல்லூரி அதிபர் திரு. பொன். நடராசா தலைமை வகித்தார்.

## நியமனப்பத்திரம் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கத்தில் அண்மையில் கிளைகளுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

கூட்டுறவு இலாகா அதிகாரிகள் தோதல் அதிகாரிகளாகக் கடமையாற்றினார்கள். ஒரேயொரு கிளையில் மட்டும் போட்டி இடம்பெற்றது. மற்றைய சகல கிளைகளிலும் போட்டியின்றி தெரிவுகள் இடம்பெற்றன.

(ம)

## அறுவடை விழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவசாயப் பகுதியினரால் வயல் அறுவடை விழா அண்மையில் நடைபெற்றது. அவ்விழா மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ஏ. ரி. தம்பியையா தலைமையில் நடைபெற்றது.

விழாவை ஆரம்பித்து பணிப்பாளர் பேசுகையில்; '1980 ம் ஆண்டு முதல் முரசுமோட்டை விவசாயி திரு கந்தசாமியின் பண்ணையில் சி. ஓ. 10 இனக் குரக்கனும் 1982ல் பி. ஜி. 500 ரக நெல்லினமும் அகில இலங்கையில் பெரும் சாதனை படைத்தது இதனால் இப் இப்பகுதி மக்கள் பெருமபயன் பெற்றுள்ளார்கள் என்று குறிப்பிட்டார்.

[83-எஸ்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செக்கோசிலாவாக்கியாவிலிருந்து
# பெரும்பகுதி சோவியத் துருப்புக்கள்
# ஜூன் மாதத்திற்குள் வெளியேறுவர்

(பிராக்)

**செக்கோசிலாவாக்கியாவில் நிலைகொண்டுள்ள சோவியத் துருப்புக்களில் மேலும் பெரும் பகுதியினர் ஜூன் மாதத்திற்கு முன்னர் வெளியேறி விடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.**

இந்தத் துருப்புக்களின் முழுமையான வெளியேற்றம் எப்பொழுது நிறைவுபெறும் என்று அறிவிக்கப்படாத போதிலும் கூடிய விரைவில் இது நடைபெறலாம் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இது இவ்வாறிருக்க '1991ம் ஆண்டு இறுதியளவிலும் சோவியத் துருப்புக்கள் முற்ருக வெளியேறமாட்டார்கள்' என்று செக்கோசிலாவாக்கியாவிலுள்ள சோவியத் இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

செய்தி நிருபர்கள், மற்றும் மேற்கு நாட்டுத் தூதரங்களைச் சேர்ந்த இராணுவ விவகார உத்தியோகத்தர்கள் முன்னிலையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

போலந்து எல்லைக்கு அருகிலுள்ள இரண்டு முகாம்களிலிருந்து 73,500 துருப்புக்கள் இன்று வெளியேறுவார்கள் என்றும் அந்தத் தளபதி மேலும் தெரிவித்தார். (து)

## அரிசி விலை சரிவு

(பண்டத்தரிப்பு)

காலபோக நெல் அறுவடையைத் தொடர்ந்து பண்டத்தரிப்புப் பகுதியில அரிசியின விலை சரியத்தொடங்கியுள்ளது.

கிலோ 18 ரூபாவுக்கு விற்கப்பட்ட நல்லதரமான குத்தரிசி தற்போது 16 ரூபாவாக குறைந்துவிட்டது இந்த விலை மேலும் குறையலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (72)

## தொழில் பயிற்சி பெறுவோர்
## அமைப்பாக செயல்பட்டால்
## சுயமாக சம்பாதிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தொழில் பயிற்சி பெறும் மாணவர்கள் அரச உத்தியோகம் கிடைக்கும் என நம்பியிராமல், பெற்ற பயிற்சியை கொண்டு குழுக்களாக இயங்கி அமைப்பாக செயல்படுவதன் மூலம் சுயமாக சம்பாதிக்க முடியும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பிரதேச கல்வித்திணைக்களபதில் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி யாழ். மாவட்டத்தில்முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் படவரைஞர் பயிற்சி நெறியைப் பயிலும் மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார். இவ்வைபவம் யாழ். இந்துக் கல்லூரியில், குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் வைபத்தில் கல்விப் பணிப்பாளர் தொடர்ந்து உரையாற்றுகையில், ''இங்கு குழுமியிருக்கும் மாணவர்கள் ஒவ்வொருதுறையிலும் நல்ல பயிற்சியைப் பெற்றிருக்கின்றீர்கள். உங்களால் உங்கள் சேவை எங்கு தேவைப்படுமென்பது தெரியும். நீங்களே அவற்றைத் தேடி இனங்கண்டு குழுவாகச் செயல்பட்டு ஒருவருக்கு கட்டிடம் அமைப்பதில் ஏற்படும் செலவினங்களைக் குறைப்பதற்கும், வீண்விரயங்களை தடுப்பதற்கும் உதவிவழங்கினல் அவர்கள் மூலமாகவே நிறைய வருமானத்தைப் பெற முடியும். இப்படியாக உங்கள் திறமை எப்போதும் பணவருவாயைத் தேடித்தரும் என்ருர்.

இவ வைபவத்தில் உரையாற்றிய படவரைஞர் பயிற்சி நெறி போதனுசிரியர் திரு. ஏ. சூரியகுமார் உரையாற்றுகையில் 'கற்பதற்கு வயதெல்லை கிடையாது. எனவே கற்பது என்பது இன்ருே நாளையோ முடியும் செயல் அல்ல. வருமானத்தை தேடிக் கொண்டிருந்தாலும் எவரும் படிப்பை முடித்துக் கொள்ளக் கூடாது'' என்ருர் உயர்ஸ்தானிகராலய அதிகாரிகளும் உரையாற்றினர். (12)

## பொலிஸார் பாவித்த
## கட்டடம், வாகனங்களை
## ஒப்படைக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

அவசரகால சட்டத்தின் கீழ் பெறப்பட்ட அரசு, தனியார் கட்டிடங்கள், வாகனங்களை மார்ச் மாதம் 1ம் திகதிக்கு முன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு பொலிஸாருக்கு பொலிஸ் மா அதிபர் உததரவிட்டுள்ளார்

இதற்கமைய ஆயிரக்கணக்கான கட்டிடங்களும், வாகனங்களும் விரைவில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப் படவுள்ளது.

இதே வேளை வெளிநாட்டு உதவி நிறுவனங்களிடமிருந்து பெற்ற வாகனங்களை அவர்களிடம் உடனடியாக ஒப்படைக்குமாறு முப்படைகளுக்கும் பாதுகாபபு அமைசசு உத்தரவிட்டுள்ளது. (சி)

## வன்முறையைத் தூண்டுவதாக
## கம்யூனிஸ்டுகள் மீது
## நேபாளம் குற்றச்சாட்டு

(காட்மண்டு)

நேபாளத்தில் பல கட்சி ஜனநாயக முறை கோரும் இயக்கத்தை தீவிர கம்யூனிஸ்டுகள் தவருகப்பயன்படுத்தி வன்முறையைத் தூண்டிவிடுவதாக நேபாள அரசு குற்றம் சாட்டியுள்ளது.

நேபாள தலைநகரிலும் பிற இடங்களிலும் சமூகவிரோத ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடுசெய்து குழப்பங்களைத் தூண்டுவதில் கம்யூனிஸ்டுகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்று மேலும் குற்றம்சாட்டப்பட்டது. (து)

## இராசி பலன்

26 - 2 - 1990

திங்கட்கிழமை

பிரதமை பகல் 12 மணி 09 நிமி, பூரட்டாதி நள்ளிரவு 12மணி 54 நிமி. மரணயோகம், இராகுகாலம் காலை 8 மணி 0 நிமி. முதல் 9 மணி 28 நிமி. வரை சுபகருமங்களுக்கு ஏற்றதல்ல.

மேடம்: கவனக் குறைவு, வருமானம் பாதிப்பு, அலைச்சல் மிகுதி, பயனற்ற பிரயாசம். தொழில் குறைவு, கவலை.

இடபம்: இடமாற்றம், தொழில வெற்றி, பணப்புழக்கம். உபசாரம், நல்லோர் சந்திப்பு, குடும்ப வெற்றி.

மிதுனம்: அதிர்ஷ்டம், குடும்ப மகிழ்ச்சி, மங்களகாரியம், பெரியோர் ஆசி, பயணங்களால் நன்மை.

கடகம்: மனவேதனை தொழில் பாதிப்பு, அதிகாரிகள் தொல்லை, குடும்பத்தில் வாக்குவாதம், அலைச்சல்.

சிங்கம்: விவேகமற்றசெயல், கண்ணியக் குறைவ, மறைமுகமான எதிர்ப்பு, நண்பர் விரோதம், வெகுமதி.

கன்னி: எதிர்பாராதஉதவி, திருமணப் பேச்சு, தாய்வழி நினைவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, கல்வியால் சிறப்பு,

துலாம்: தான் தோன்றித்தனம். தொழில் லாபம், ஆலய தரிசனம், வேலைப்பளு, தியாக சிந்தை.

விருச்சிகம்: ஏக்கம், தவருன செய்தி. பகைவர் தொல்லை. தொழில் கேடு, அகால போஜனம்.

தனுசு: பழைய யோசனைகள், குடும்பத்தில் பிரிவு. வைத்தியச் செலவு, தவருன போக்கு, வெறுப்பு.

மகரம்: குதூகலம், கடித உறவு, தொழில் பாராட்டு, தொண்டு மனப்பான்மை, தலைமைத்துவம்.

கும்பம்: கடும்கோபம், மாமன் வகை பகை, வீண் செலவு, பயணங்களால் அலைச்சல், அந்நியர் உறவு.

மீனம்: புதிய சிந்தனை, பழைய பாக்கி வசூல், அதிசமுதலீடு, குடும்பத்தில் சுபகாரியம், கடும் உழைப்பு.

## மாணவர்கள் பாதிப்பு

(புங்குடுதீவ)

புங்குடுதீவு மகாவித்தியாலயததில் கல்வி பயின்றுவரும் மாணவர்கள் அங்கு ஆசிரியர்கள் பற்ருக்குறைவினல் முறையாகக் கல்வி கற்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## நிவாரணப் பணம் வழங்கப்படவில்லை

(பண்டத்தரிப்பு)

மீளக்குடியமர்தல் நிவாரணப் பணம் பண்டத்தரிப்புப் பகுதியைச் சேர்ந்த பலருக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மீளக்குடியமர்தல் நிவாரணப்பணமான இரண்டாயிரம் ரூபாவுக்குப் பதிலாக ஆயிரம் ரூபா சிலருக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை மூலம் வழங்கப்பட்டிருப்பதாகவும், விண்ணப்பித்த பலருக்கு இந்த ஆயிரம் ரூபாகூட இதுவரை கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (72)

## தென்கொரியாவில்
## புதிய அரசியல் கட்சிக்கு
## எதிராக ஆர்ப்பாட்டம்

(சியோல்)

தென் கொரியாவில் புதிதாக அரசியல் கட்சி ஒன்று அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இங்குள்ள இரண்டு எதிர்க்கட்சிகள் இணைந்து 'ஜனநாயக லிபரேஷன்' என்னும் பெயரில்கட்சி ஒன்றினை ஆரம்பிக்கப்போவதாக அறிவித்திருந்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்திஞர்கள்.

இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களில் 400 பேர் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள். (து)

## அமைதிப்படையினரின்
## வீதித் தடைகள்
## அகற்றப்பட்டது

(வேலணை)

வேலணைப்பகுதிகளிலுள்ள பிரதான வீதிகள் இந்திய அமைதிப்படையினரால் வீதித்தக்குறுக்காகப் போடப்பட்டிருந்த வீதித்தடைகள் எல்லாம் தற்பொழுது அகற்றப்பட்டு வருகின்றன.

வங்களாவடிச் சந்திக்கு சமீபமாகப் போடப்பட்டிருந்த ஏழு தடைகள் வீதி அபிவிருத்தி அதிகார சபையினுலும், வேலணைப் பிரதேச சபை ஊழியர்களாலும் அகற்றப்பட்டதைத் தொடர்ந்து வாகனங்கள் எல்லாம் அவ்வீதியால் சென்றுவருகின்றன.

# நிக்கரகுவாவில் பொதுத்தேர்தல்

(மனகுவா)

நிக்கரகுவாவில் புதிய அதிபரை தேர்ந்தெடுப்பதற்கான முதலாவது பொதுத் தேர்தல் நேற்று நடைபெற்றது.

இத்தேர்தலைக் கண்காணிப்பதற்கென ஐ. நா. குழு ஒன்று ஏற்கனவே நிக்கரகுவா சென்றுள்ளது.

சர்வதேச கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையில் இத்தேர்தல் நடைபெற்றது.

18 லட்சத்திற்குமதிகமான வாக்காளர்கள் இத்தேர்தலில் வாக்களித்தாகத் தெரிவிக்கப்பட்டது. (து)

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்ட தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்களின் சமாசக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. எஸ். வாமதேவன் புலோலி ப. நோ. கூ. சங்கக் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார். புலோலி ப. நோ. கூ. சங்க அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய திரு. எம். குலவீரசிங்கம் திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (52)

## போதைப் பொருளினல்
# பாதிக்கப்படும் நாடுகளுக்கு
## உதவுமாறு ஐ. நா. வேண்டுகோள்

(ஜெனீவா)

சட்டவிரோத போதைப் பொருள் கடத்தல்காரர்களினல் பாதிக்கப்படும் நாடுகளுக்கு ஆதரவும் உதவியும் வழங்கப்படவேண்டுமென்று செல்வந்த நாடுகளை ஐ. நா. சபை கேட்டுள்ளது.

செல்வந்த நாடுகள் தத்தமது நாடுகளில் போதைப் பொருள் பாவனையைக் குறைத்து ஏழைநாடுகளின் வளர்ச்சிக்கு உதவுமாறும் இச் சபை கேட்டுள்ளது.

இந்நாடுகளிலுள்ள விவசாயிகளின் மாற்றுப் பயிர்ச்செய்கைக்கு உதவுமாறும் செல்வந்த நாடுகள் கேட்கப்பட்டுள்ளன.

159 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட ஐ. நா. சபையின் இந்த வேண்டுகோளை பல செல்வந்த நாடுகள் ஏற்றுச் செயல்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

இரத்தினத்தை ஒருவன் குறைவாக மதித்தால் அது அவனுடைய குறைவேயன்றி இரத்தினத்தின் குறைவல்ல.

— பர்த்ருஹரி நீதி

# நமது நோக்கு

## 'வால்பேத்தை' இயந்திரங்களையா ஆக்கவேண்டும்?

இன்றைய மாணுக்கர் கதையிலே புதிய அத்தியாயம் எழுதப்பட்டு வருகின்றது.

வெறும் ஏட்டுக்கல்வியோடுநில்லாது, உடல், உள வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துவதிலும் கவனம் பெருகுகின்றது. அதற்காக அவர்களுக்கு ஒய்வுகிடைக்க வழிசெய்யும் நோக்கோடு, தனியார்கல்வி நிலையங்களுக்குச் செல்லும் நேரம் கட்டுப்படுத்தப்படுகின்றது.

உயர்கல்விவாய்ப்புக்காக-பரீட்சையிற் கூடிய புள்ளிகளை மத்திரம் பெறுவதற்காக - எலியோட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள் மாணுக்கர்கள்.

'இங்கு துரித மீட்டல்; அங்கு 'பேப்பர் கிளாஸ்' - இப்படி அங்கிங்கெனுதபடி எங்கும் ஓடுகிருகள்; ஓய்வு ஒழிச்சல்இன்றிஓடுகிருர்கள்.

எனவே, உடல்நல வளர்ச்சிக்கான விளையாட்டுக்களிலோ, பயிற்சிகளிலோ பங்குபற்ற வாய்ப்பில்லை; நேரமில்லை.

உள்ளத்தைப்பண்படுத்தி இதயத்தைச் சீராக்கி, கலையுணர்வை வளர்ப்பதற்கான இசை, நடன, நாடக, ஒவியக்கலைகள் போன்றவற்றிற் பங்குபற்ற ஒய்வு கிடைக்கிறதா?

எமது பாரம்பரிய கலாச்சாரத்தை அறியவோ, அரசியற் பொருளாதாரப் பின்னணியை விளங்கவோ நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வாசிக்க வாய்ப்பு ஏற்படுகின்றதா? சந்தேகம்தான்!

அவர்கள் ஓடிஓடிப்பெறும் அறிவு என்ன? நூலறிவு – பரீட்சையை மையமாகக் கொண்ட குறிப்புகளின் தொகுப்பு.

இதனுல் உடலின் மூளைப் பகுதி மாத்திரம் தான் வளர்ச்சியடையும். உடல் வளர்ச்சியோ, இதயவளர்ச்சியோ குன்றும். இதன் விளைவு? ''வால்பேத்தைகள்'' போல ஒரு பகுதி மாத்திரம் வளர்ச்சியடைந்து விடுவதுதான்!

இக்கருத்தை வலியுறுத்தி நாடகங்களும், ஓவியங்களும், காட்டூன்களும் வெளியானதை நாம் மறப்பதற்கில்லை.

பெற்ருேர் தம் பிள்ளைகளுக்கு உயர்கல்வியை அளிக்க ஆசைப்படுவதையோ, அதற்காகத் தம்மாலான முழு முற்யசிகள் எடுப்பதையோ எவரும் குறைகூற நியாயமில்லை.

தமது பிள்ளைகள் பெறும் கல்வி மூலம், பெரும் பதவிகளையும், தொழில்களையும் பெறவேண்டும் என்று அவர்கள் நினைப்பதில் தவறில்லை.

ஆனுல், மாணுக்கரின் எதிர்காலம் வெறும் தொழில் பெறும் இயந்திர வாழ்க்கையா?

வாழ்க்கையின் சிக்கல்களைச் சமாளித்து, மகிழ்வோடு வாழ, வளமோடு வாழ, வழிகாட்டப்பட வேண்டாமா?

தலைமைத்துவம், சமூகப் பணி, பொதுநலம் பேணல் போன்ற அருங்குணங்களை வளர்க்கச் சாரணீயம், இலக்கிய மன்றங்கள், முதலுதவி போன்ற இன்னேரன்ன புற ஈடுபாடுகளிற் பங்குபற்றவேண்டாமா?

இவற்றிற்கெல்லாம் பாடசாலைகளில் ஒழுங்கு செய்யப்படும் இணைப்பாட நிகழ்ச்சிகளிற் பங்குபற்ற மாணுக்கர் தூண்டப்பட வேண்டும். பெருமளவு மாணுக்கர்கள் இவற்றில் ஈடுபடாத துர்ப்பாக்கிய நிலையே இற்றைவரை இருந்துவந்தது என்பது பல அதிபர்களின் கவலை.

எனவேதான், தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்லும் நேரம், கொடுக்கும் கட்டணங்கள் ஆகியவற்றிற்குக் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்படுவதைப் பெற்ருேர் விரும்பி ஏற்பார்கள்.

தங்கள் பிள்ளைகள் வெறும் ஏட்டுக்கல்வியை மாத்திரம் பெற்று 'வாற்பேத்தை' இயந்திரங்களாக மாறுவதை எந்தப்பெற்ருேர் தான் விரும்புவர்?

## நயினுதீவில் தண்ணீர் கஷ்டம்

(புங்குடுதீவு)

நயினுதீவுப்பகுதியில் தண்ணீருக்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டுவருகின்ற போதிலும் அங்கு குடிநீர் விநியோக திட்டத்தின் மூலமாக நன்னீர் வழங்கப்பட்டு வருகின்றது.

அங்கு சிலபைப்புகள் உடைந்தநிலையில் காணப்படுகிறது. இந்நிலைகளால் நேரகாலத்திற்கு தண்ணீரை பெறமுடியாமல் வீதிகளில் குடங்கள், வாளிகளுடன் மக்கள் நீண்ட நேரமாக காத்துநிற்க வேண்டியுள்ளது. [101]

## புதியவருமானவரி ஆணையாளர்

(யாழ்ப்பாணம்)

முன்னுள் வருமானவரிஆணையாளர் எம். டபிள்யூ. எம். பி வீரசிங்க வெளிநாட்டில் பதவி ஏற்கச் செல்கிறபடியால் அவரின் இடத்துக்கு புதிய ஆணையாளராக திரு. ரி. இரத்தினசுந்தரம் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## மின் அத்தியட்சகர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை மின் அத்தியட்சகர் திரு. செல்லத்துரை ஞானசேகரம்பிள்ளை மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் காங்கேசன்துறை பிரதேச சபையின் மின் அத்தியட்சகராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாநகர சபையில் எட்டு ஆண்டுகளாகக் கடமையாற்றிய இவர், யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக கடந்த நான்கு ஆண்டுகள் நெருக்கடிகள் மத்தியில் சிறப்புடன் கடமையாற்றி மக்களின் ஆதரவைப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# தென்கிழக்காசிய போதைவஸ்து முதலாளிகளின் சாம்ராஜ்யம்

1989ம் ஆண்டில் மாத்திரம் அபினி மற்றும் போதை வஸ்துக்களை ''பொன்முக்கோணத்திலிருந்து'' வேறு நாடுகளுக்குக் கடத்திய முதலாளிகள் 42 பில்லியன் டாலர்களைச் சம்பாதித்தனர்.

தாய்லாந்து, லாவோஸ் மற்றும் பர்மா எல்லைகள் சந்திக்கும் இடமே ''பொன் முக்கோணமாகும்''

இது உலகின் மிகப் பெரிய போதைவஸ்து உற்பத்தி செய்யும் பிரதேசமாகும். அதைப் பக்குவப்படுத்த தொழிற்சாலைகளும் உள்ளன.

இப்பகுதி 1950களில் உலகக் கவனத்தை ஈர்த்தது. வியட்நாம் போர் நடைபெற்ற காலத்தில் இது நடைபெற்றது

இங்கேயிருந்து அமெரிக்காவுக்கு போதைவஸ்துகள் கடத்தப்பட்டன ஐ. நா. புள்ளி விபரங்களின் பிரகாரம் இது அமெரிக்காவின் பிரதான விநியோகமாகும் வியட்நாம் போரில் ஈடுபட்ட படை வீரர்களில் அநேகமானேர் போதைப் பிரியர்களாக மாறினர். சிலர் வியாபாரம் செய்ய ஆரம்பித்தனர். இவர்கள் பெருந்தொகையான போதைவஸ்துக்களை அமெரிக்காவுக்கு எடுத்துச் சென்றனர்.

தென்கிழக்காசியாவில் 3000—6000 டாலருக்கு வாங்கக்கூடிய ஒரு கிலோ கிரும் போதைவஸ்தை அமெரிக்காவில் 10 லட்சம் டாலருக்கு விற்கலாம்.

அமெரிக்காவில் பாவிக்கப்படும் போதைவஸ்தில் 30சதவிகிதம் தென்கிழககாசியாவிலிருந்து வருகிறது

''பொன் முக்கோணத்து'' போதைவஸ்து வியாபாரிகளுக்கு அமெரிக்க பிரெஞ்சு ரகசிய சேவைகளின் உதவி ஒத்தாசை ஆரம்பத்தில் இருந்தது. 1940களிலும், 1950களிலும் மேற்கத்திய வல்லரசுகளின் ஆதிக்கம் அப்பிராந்தியத்தில் இழைக்க இம்முதலாளிகள் உதவினர்.

1945—1949களில் யுத்தத்தைத் தொடர்ந்து சீனுவிலிருந்துதப்பியோடிய கோமிங்டான் ஜெனரல் லிங்க் லீ இப்பகுதியில் தனது போதைவஸ்து சாம்ராஜ்யத்தை நிறுவினுர். அவருடைய பலத்துக்கு முன்னுல் தென்கிழக்காசிய நாடுகளின் அரசாங்கங்கள் ஏதும்செய்ய முடியாது தவித்தன.

1950களில் ஜெனரல் ஸிங்மின்னுடைய 12,000 துருப்புக்களை அமெரிக்க ராணுவ ஆலோசகர்கள் பயிற்சிபெற அவர்கள் சீனு மீது படையெடுக்கவேண்டுமென்பது வாஷிங்டனின் விருப்பமாகும். போமிங்டன் ராணுவ அதிகாரிகள் போதைவஸ்து வியாபாரத்தில் இறங்கி பணம் சம்பாதித்தனா. அவர்களுடைய பலம அதிகரித்தது. பர்மாவுக்குள் படையெடுக்கும் அளவுக்கு அது வளர்ந்தது. 1961ம் ஆணடு பர்மா படைப் பிரிவுகள் போதைவஸ்து முதலாளிகளின் ''கோட்டை'' ஒன்றை முற்றுகையிட்டபோது அவை பெரும் விமானத் தளங்களைக் கூட வைத்திருப்பதை கண்டுபிடித்தனர்.

இந்தோ, சீனு போர் நிகழ்ந்த காலத்தில், வியட்னுமிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக செயல்பட பாரிஸின் அனுமதியுடன் பிரெஞ்சு ரகசிய சேவை போதைவஸ்து கடத்தலில் இறங்கியது. இவர்கள் சைகோன் அரசாங்கத்தின் உதவியுடன் இயங்கின.

பிரெஞ்சு ஆட்சிபோய் அமெரிக்க ஆதிக்கம் மேலோங்கியபோதும இது தொடர்ந்தது இதில் தென்வியட்னுமிய அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் அநேகமானேர் சம்பந்தம்பட்டிருந்தனர்.

இன்று ''பொன் முக்கோணத்தில்'' இயங்கும் பெரும் போதைவஸ்துக் கடத்தல் காரர்கள் ஆரம்பத்தில் அமெரிக்கப் பிரெஞ்சு ரகசிய சேவைகளின் ஒத்தாசையின்றி இன்று பெற்றிருக்கும் பலத்தை பெற்றிருக்க முடியாது.

தொகுப்பு: சிவா

## குடிநீர் தட்டுப்பாடு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு கண்ணகை அம்மன் கோவிலடி அரசினர் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள பகுதிகளில் வாடிகளை அமைத்து தொழிலில்ஈடுபட்டு வரும் பெருந்தொகையான குடும்பங்கள் மலசலகூடம், குடிநீர் வசதியின்றி பெரும் துயரங்களை அனுபவித்து வருகின்ருர்கள். (101)

## புதிய சட்டம் பேக்கரிகளுக்கு செல்லாது

(நமது நிருபர்)

கடை திறப்பு நேரம் சம்பந்தமான புதிய சட்டம், பேக்கரிகள், சாப்பாட்டுக் கடைகள் மற்றும் உணவு வகைகள் விற்பனை செய்யும் கடைகளுக்குச் செல்லுபடியாகாதெனத் தொழிலாளர், சமூக நலக் காரியதரிசி திரு. [illegible] ளார்.

# மன்னுர் செய்திகள்

### மீனவர்களுக்கு படகு

[மன்னுர்]

மன்னுர் துயர் துடைப்புச் சங்கம், வெளிநாட்டு உதவியுடன் இளம் மீனவர்களுக்கு மீன்பிடிப் படகுகளை மானிய விலையில் தவணைக்கடன் வசதியில் வழங்க முன் வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் வன்செயலில் பாதிக்கப்பட்டவர்களை தெரிவு செய்து மூன்று இளைஞர்களுக்கு ஒருபடகு வழங்கி மொத்தமாக 150 இளைஞர்களுக்கு 50 படகுகள் இயந்திரம் ஆகியன அண்மையில் மன்னுரில் வைத்து வழங்கப்பட்டன. இதன் பெறுமதி 75,000/- ரூபாவாகும். இதனுல் பல மீனவர்கள் நல்ல பயனை அடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### அட்டைக்கு நல்லகிராக்கி

மன்னுர் மாவட்டத்தில் முள்ளிக்குளம், அரிப்பு, வங்காலை, எருக்கலம்பிட்டி, பேசாலை, தலைமன்னுர் போன்ற இடங்களில் கடலில் கூடுதலான அட்டைகள் பிடிக்கப்படுகின்றன. நன்கு பதப்படுத்தப்பட்டு அவித்து காய்ந்த முதல் தரமான அட்டை கிலோ 750/-ரூபாவாக விலை போகின்றது. இவை கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிங்கப்பூருக்கு ஏற்றுமதியாகின்றன.

### உலகதரிசன வேலைகள்

மன்னுரில் உலக தரிசன நிறுவனத்தினரால்8 லட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இத்திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்பு, ஆடுவளர்ப்பு, மீன் கருவாடு பதனிடும் தொழில். மேட்டு நிலப்பயிர்ச்செய்கை போன்ற அடங்கும். அண்மைக்காலத்தில் நாட்டில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இத்திட்டங்களை நடைமுறைப் படுத்த முடியாமல் தடைப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் வேலைகளை துரிதப்படுத்தும் முகமாக மாவட்ட கிராம அபிவிருத்தி அதிகாரி ஜனுப். எஸ். அபுசாலி மேற்கொண்டு வருகின்ருர்.

### லூர்து அன்னை திருவிழா

கோடானு கோடி பக்தர்களின் வேண்டுதலை நிறைவேற்றி அருள்பாலிக்கும் லூர்து அன்னையின் திருவிழா அண்மையில் மாந்தையில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இத்திருவிழாவை முன்னிட்டு மூன்று நாட்கள் வழிபாடுகள் இடம்பெற்றன. திருவிழா தினத்தன்று மன்னுர் ஆயர் மேதகு தோமஸ் சவுந்திரநாயகம் அவர்களால் திருப்பலிப்பூசைஒப்புக்கொடுக்கப்பட்டது. விசேட போக்குவரத்து வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டதால்பக்தர் கூட்டம் பெருவாரியாகவே இருந்தது. இரவு 7-00 மணிக்கு பங்குத் தந்தை அருட்திரு. எஸ். ஹெபேட் தலைமையில் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

### மன்னுருக்கு லக்ஸ்ஸபானு மின்சாரம்

மன்னுருக்கு மிகவிரைவில் லக்ஷ்ஸபானு மின்சாரம் கிடைக்க இருக்கின்றது. இதற்காக பூர்வாங்க வேலைகள் மிகவும துரிதமாக நடைபெறுகின்றது. செட்டிக்குளத்திலிருந்து புகையிரத பாதை வழியாக வரும்இரும்பு தூண்கள் எல்லா மன்னுர் வரை போடப்பட்டும் முருங்கன் மட்டும் கம்பி தொடர்புகள் ஏறபடுத்தப்பட்டும் உள்

(5ம் பக்கம் பார்க்க)

# பலதும் பத்தும்

### மண்ணுக்கு அடியில்....!

மண்ணிற்கு அடியில் கிடைக்கும் கனிப்பொருள் வளங்களை அறிவதெப்படி?

பண்டைக் காலத்தில்—சோதிடத்தை நாடினுர்கள். யூகத்தைப் பயன்படுத்தினுர்கள். 'வந்தா வா, போனுற் போ' என்ற சித்தாந்தம் தான்!

இன்று — இலங்கையில்— இரத்தினக்கல் போல் கனிவளம் கண்டறிய விஞ்ஞானரீதியான ஆய்வுகள் நடைபெறுகின்றன. அடிப்படைக் கல்வி ஆய்வு நிலையம் (Institute of Fundamental Studies) இதில் ஈடுபட்டு வருகிறது.

ஆகாயத்திலிருந்து விசேட படப்பிடிப்புகள் — மண் ஆராய்ச்சிகள் — இவ்வாண்டிலே பூர்த்தியாகிவிடுமாம்!

சுவீடிஸ் நிறுவனம் ஒன்று நிலத்தடி நீர், எண்ணெ, கனிவளம் ஆகியவற்றை எளிதிற் கண்டுபிடிக்கக் கருவிஒன்றை ஆக்கியுள்ளது.

கம்பியூட்டரின்உதவியுடன் ஆக்கப்பட்ட இக்கருவியின் பெயர் 'எபனீஸ் ரெருலொக் சிஸ்டம்' (Abenis Teroloc System)

எமது மண்ணின் கனிவளம் காண இக்கருவியும் உதவுமோ?

வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாடசாலைகளில் நிறைவான கல்வி போதிக்கப்படுகிறது"

## வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் செல்வி ஆர். ராஜரட்ணம்

### தனியார் கல்விநிலையங்கள் — ஒரு கருத்துக் கணிப்பு

**தனியார் கல்வி நிலையங்களுக்கு மாணவர் செல்வது மார்ச் முதலாம் திகதி முதல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், மாணவர்களின் கல்வித்தரம் பாதிக்கப்படுமா? என்பதை சகல கல்லூரி அதிபர்களிடம் கருத்தைக் கேட்டறிந்தோம். அவர்களது கருத்துக்கள் இன்றுமுதல் வெளியிடப்படுகின்றன.**

தமிழ்ப் பிரதேசங்களில் எழுபதுக்கு பிற்பட்ட காலப் பகுதியில் நிகழ்ந்த மாற்றங்களினுல் தனியார் கல்வி நிலையங்களின் ஆக்கிரமிப்பு அதிகரித்துக் காணப்பட்டுள்ளது. காரணம், பாடசாலை நாட்களைவிட பாடசாலை இல்லாத நாட்களே அதிகமாகக் காணப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு மாணவர் மத்தியிலும், தனியார் கல்வி நிலையங்களை நாடிச் செல்வதற்கு வாய்ப்பாக உருவாகியது. பாடசாலையில் கல்வி கற்கும் ஆசிரியர்களே, தமது மாணவர்களுக்கு மனமாற்றத்தை ஏற்படுத்தி தனியார் கல்வி நிலையங்களுக்கு அவசியமாகப் போக வற்புறுத்தி வந்தனர். இவை நாளடைவில் ''ரியூச'' னுக்குப் போனுல்தான் பல்கலைக்கழகம் செல்லலாமென ஒரு மயக்கத்தை மாணவர்கள் மத்தியில் தோற்றுவிக்க வழி செய்துவிட்டது.

இன்றும்கூட வேம்படி மகளிர் கல்லூரியில் அனுமதி பெற விரும்பும் பெற்றோர்களே வேம்படியில் படித்தால் ரியூசனுக்குப் போகலாமென எண்ணுகிறார்கள்.

பாடசாலைகளில் இன்று நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை, கிரமமாகப் பாடசாலை நடைபெற உதவுதல் மேலதிக வகுப்புகள், மாணவர்களுக்கு போதிய வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் செயல்படுத்தப்பட்டால் எந்தவொரு மாணவரும் தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்லவேண்டிய அவசியம் இருக்காது.

இன்று மாணவர்கள், தனியார் கல்வி நிலையங்களிற்குச் செல்வதால் சுயமாகச் சிந்தித்து விடையெழுத தவறிவிடுவதுடன் பரீட்சையில் எப்படி விடையெழுதவேண்டுமென்ற பயிற்சியின்றி தடுமாறுவதை அவதானிக்க முடிகிறது. பாடசாலைகளில் பாடத்திட்டத்தின் அடிப்படையில் ஜனநாயகக் கல்விக் கோட்பாட்டில், போதிய அனுபவமும், பயிற்சியுமுள்ள ஆசிரியர்களால் போதனை செய்யப்படுகிறது. மாணவர்களை பல்வேறு நிலையிலும் திறமையை வெளிக்கொணர்ந்து சுயமாகச் சிந்தித்து விடையெழுதவே போதனை செய்யப்படுகிறது. இதனுல் மாணவர்கள் எதிர்காலத்தில் இலக்கை நோக்கிச் செல்வதற்கு வாய்ப்பு உருவாகிறது.

தனியார் கல்வி நிறுவனங்களில், மாணவர்களுக்கு தேவைக்கதிகமான முறையில், பாடத்திட்டத்தையும் மிஞ்சி போதனை நடைபெறுவதால் தாம் கல்லூரியில் படிப்பதைக் காட்டிலும் அதிகமாக இங்கு கற்பதாக எண்ண வழி செய்யப்படுகிறது. இதனுல் மாணவர்கள் மத்தியில் குழப்பநிலை தோற்றுவிக்கப்படுகிறது. மாணவர்கள் ஒரு மாற்றம் அடைந்துபலதடவைகளில் திறமையான மாணவரும் பரீட்சையில் திறம்பட செயல்பட முடியாமல் தவறிவிடுகின்றனர்.

பரீட்சைக்கான விளுக்கள் பாடசாலைகளில் நடைபெறும் போதனுமுறையை அடிப்படையாகக்கொண்டே தயாரிக்கப்படுகிறது. மாணவர்களும் இந்த அடிப்படையிலே தயார் செய்யப்படும்போது, தரப்படும் விளுக்களுக்கு ஒவ்வொரு மாணவரும் சுயமாகச் சிந்தித்து விடையெழுத முடியும். தனியார் கல்வி நிலையங்களில் தேவைக்கதிகமான போதனு முறையால் மாணவரின் சிந்தனுசக்தி மழுங்கடிக்கப்படுகிறது. ஒரு மாணவர் இன்று ஒரே பாடத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வதால், ஓய்வு ஒழிச்சலின்றி மனேநிலை பாதிக்க இடமுள்ளது. இன்றும்கூட ரியூசனுக்கு செல்லாத மாணவர்கள் கிரமமாக வகுப்புகளுக்கு வந்து, பாடசாலைகளில் மேலதிக வகுப்புகளுக்கும் சமுகம் கொடுத்தவர்கள் பல்கலைக்கழகம் சென்றிருக்கிறார்கள்.

பல பெற்றோர்கள், தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதானுல் போட்டி போடவேண்டிய நிலையிருப்பதாக வாதாடுவதாயும், ''ரியூசன்''கள் துணை புரிவதாகவும் வாதாடுகிறார்கள். அதனை நான் மறுக்கிறேன். ஒவ்வொரு மாணவருக்கும் பாடசாலைகளில் நிறைவான கல்வியே போதிக்கப்படுகிறது. திறமையான ஆசிரியர்களே போதனை செய்கிறார்கள். பரீட்சைக்கான பூரண பயிற்சி வழங்கப்படுகிறது. இதனைத்தான் தனியார் கல்வி நிலையங்களும் செய்கின்றன. பாடசாலைகளில் மாணவர்களுக்குப் போதிய ஓய்வும், கற்றதை மீண்டும் திருப்பி கற்பதற்கும் வசதியுள்ளது. இதன்மூலம் ஒரு சராசரி மாணவர் பூரணமாக விடையெழுதி உயர்ந்த மதிப்பெண்ணைப் பெற்றுக் கொள்ளலாம். ரியூசன்களால் ஒரு மாணவரை சுயமாகச் சிந்திக்க முடியாமல் செய்து அவர்மீது சுமை ஏற்றப்பட்டு திறமையாகப் பரீட்சை எழுத முடியாதபடி செயல் ஊக்கம் கொடுக்கின்றனர்.

தனியார் கல்வி நிலையங்களில் அடிப்படை வசதிகள் இல்லாமல் ஆண்களும் பெண்களும் ஏதோ ஒரு தூண்டலுக்கு உள்ளாக்கப்படுவதால் பெரும்பாலான மாணவர்கள் கல்வியில் பின்தள்ளப்படும் நிலைக்கு வழி செய்யப்படுகிறது. பாரதி ''காலை எழுந்தவுடன் படிப்பு........'' என்று பாடினுன். இன்றோ மாணவர்கள் காலையெழுந்தவுடன் கற்றதை மீட்கக்கூட நேரமில்லாமல் ரியூசனுக்குச் செல்வது சமுதாயத்தை எவ்வளவு தூரம் பாதித்து வருகின்றது.

இன்று எமது நாட்டில் இருக்கும் கல்விமுறை தனியார் கல்வி நிலையங்களை உருவாக்கியுள்ளன. ஒவ்வொருவரும் கல்வி கற்கும் காலத்தில் தமக்குரிய திறமையைக் கொண்டு தொழில் அமைப்பைத் தேடிக்கொள்ளும் கல்விமுறை செயல்படுத்தபடுமானுல் பாடசாலைக் கல்வியே முதன்மையடையும்.

[நாளைய இதழில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி எல். பி. ஜெயவீரசிங்கம் தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்.] (12)

## மன்னார் செய்திகள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளன. வங்காலைச்சந்தியில் மின்சார மாற்று இயக்க இயந்திரமும் பொருத்தப்பட்டுள்ளது. அனேகமாக எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம)

### சம சம்பளம்

ஆரம்பத்தில் கிராமசேவையாளர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கும் விசேட சேவை உத்தியோகத்தர்களாக இருந்து கிராமசேவையாளர்களாகப் பதவியுயர்த்தப்பட்டவர்களுக்கும் இருந்த சம்பள வேறுபாடுகள் நீக்கப்பட்டு இரு தரப்பினருக்கும் ஆரம்பச் சம்பளம் ஒரே தரத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கான சுற்றறிக்கை அண்மையில் உள்நாட்டு அமைச்சிலிருந்து வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

### மின்சாரத்திற்கு பலி

மன்னார் எழுத்தூர் வீதியில் இருக்கும் தலைமன்னார் - மன்னார் மின்னிணைப்புக் கம்பத்தில் ஏறியவர் மின்சாரம் தாக்கி கம்பத்தின் உயரப்பகுதியிலேயே பலியானுர்.

### கொத்தணி வீட்டுத் திட்டம்

மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள பேசாலை வடக்கு, நாகதாழ்வு, உப்புக்குளம், தோட்டவெளி போன்ற கிராமசேவை அலுவலர் பகுதிகளில் 30 ஆயிரம் ரூபா பெறுமதிகொண்ட தலா 50 வீடுகள் கொத்தணி வீட்டுத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை மன்னார் கோட்ட உதவி ஆணையாளர் திரு. க. இராமலிங்கம் மேற்கொண்டு வருகின்றார்.

### இலவச காணிகள்

மன்னார் தேர்தல் தொகுதியில் இலவசமாகக் காணிகள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் மன்னார் அரச அதிபர் திரு ஏ. சி. செபநாயகத்தினுல் கோரப்படுகின்றன. காணி இல்லாதவர்களுக்கே இக்காணிகள் தலா 10 பேர்ச்சஸ் வீதம் வழங்கப்படும். அத்துடன் குறிப்பிட்ட பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். காணிகள் ஏற்கனவே விண்ணப்பகாரருக்கு இல்லையென நிரூபிப்பதற்கு சமாதான நீதிபதியின் விதப்புரை அவசியமாகும். இது வரையிலும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் மன்னார் காணிக் கிளைக்கு வந்துள்ளன.

### வங்காலையில் விஞ்ஞானக் கல்வி

வங்காலை புனித. அன்னம்மாள் மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் முதன் முதலாக க. பொ. த: உயர்தர வகுப்பு விஞ்ஞானம் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை காலமும் க. பொ. த. விஞ்ஞானக் கல்வி மன்னார் நகரத்தில் மட்டுமே கற்பிக்கப்பட்டது. கிராமத்தில் வசிக்கும் மாணவர்களும் முன்னேற வேண்டும் என்ற முயற்சியினுல் மன்னார் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் இதனை அங்கு ஆரம்பிக்க வசதி செய்துள்ளனர்.

### மலேரியா தடுப்பு இயக்கம்

நீண்ட காலங்களுக்குப் பின்னர் மன்னார் மாவட்டத்தில் பேசாலை எருக்கலம்பிட்டி போன்ற கிராமங்களுக்கு மலேரியா தடுப்பு மருந்து தெளிக்கப்படுகின்றது. அண்மைக் காலத்தில் இக்கிராமங்களில் இருந்து கூடுதலானேர் மலேரியாக் காய்ச்சலினுல் பாதிக்கப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 85

## மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

மாதகல் விக்கினேஸ்வரா வித்தியாலய ஆரம்ப பிரிவு வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 1ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் திரு. மு. பரராஜசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டியில் பிரதம அதிதியாக இளவாலை கொத்தணி அதிபரும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபருமான அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக கொத்தணி உதவிஅதிபரும், மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலய அதிபருமான திரு. ச. அருள்சுப்பிரமணியம் கலந்து கொள்வார். (72)

## உடற்பயிற்சி போட்டி

(புலோலி)

வடமராட்சிகோட்டக்கல்வி பிரிவின் வருடாந்த உடற்பயிற்சிப்போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 09ம்திகதி தென் புலோலி புற்றளை மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிகோட்டக்கல்வி பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. பொன். வீரபத்திரன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு உடற்கல்வி அதிகாரிகள் திரு. கே. நாகமணி, திரு. ரி. அருணகிரிராஜா ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள். (61)

## விளையாட்டுப் போட்டி

(சித்தன்கேணி)

வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு வருடாந்த விளையாட்டுப்போட்டி அடுத்த மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கமும் விளையாட்டு அதிகாரி திரு. கே. பீலிக்ஸ்சும் மேற்கொண்டுள்ளனர். 137

## ஜம்போறிக்குழு திரும்பியது

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலிருந்து கொழும்பில் நடைபெற்ற சார்க் ஜம்போறியில் கலந்துகொண்ட நாற்பது பேர் கொண்ட குழு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் திரும்பியது. (12)

## புதிய பாடநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ். பலகலைக்கழகத்தில் புதிதாக கடற்தொழிலியல் பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பாடநெறி விஞ்ஞான பீடத்தின் கீழ் அமைந்துள்ளபோதிலும், காலகெதியில் ஒரு பீடமாக அமைக்கப்படும் எனத் தெரிகிறது. (ம)

## எரிபொருள் நிலையம் திறக்குமாறு வேண்டுகோள்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணிச சந்தியில் நீண்டகாலமாக இயங்காதிருக்கும் தனியார் எரிபொருள் நிரப்புநிலையத்தை சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பொறுப்பேற்று நடாத்தமுன்வரவேண்டும் என்று வலிமேற்குப் பிரிவிலுள்ள பொது ஸ்தாபனங்கள் பல சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்துள்ளன. (139)

## தமிழில் வெளியான நூல்கள்

(யாழ்ப்பாணம்)

அவ்வப்போது தமிழ் இலக்கிய நூல்கள் வெளியீடு நடைபெற்றுக்கொண்டிருந்தாலும், பொதுவாக தமிழில் நூல்கள் வெளியிடுவது குறைவாகக் காணப்படுகிறது, சுவடித் திணைக்கள 1988ம் ஆண்டு அறிக்கையின்படி இலங்கையில் 2275 நூல்கள் வெளிவந்திருக்கின்றன. அதில் தமிழில் மட்டும் 279 நூல்களும், 271 சஞ்சிகைகளில் 52 மாத்திரம் தமிழில் வெளிவந்திருக்கின்றன என்று அறியக்கிடக்கின்றது. (ம)

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை கலைவாணி சனசமூக நிலையத்தினர் 1990ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

காப்பாளர் நா. கணேஸ், தலைவர் சி. செல்வநாயகம், உப தலைவர் வி. தங்கராசா, செயலாளர் எஸ். அருமைத்துரை, உப செயலாளர் எஸ். புவிராசா, பொருளாளர் மு. நடராசா, உப பொருளாளர் சு. கனகரத்தினம், நிலையப் பொறுப்பாளர் சி. சிவசுப்பிரமணியம், கணக்குப் பரிசோதகர் எஸ். புவனேந்திரராசா ஐவர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (ம)

## ஆலிக்கு புலமைப் பரிசில் பெறுகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி பரமசிவம் சிவகுமார் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் புலமைப்பரிசில் பெற்று அங்கு செல்லவுள்ளார்.

இவர் ஓராண்டு காலத்திற்கு மெல் போன் பல்கலைக்கழகத்தில் - மருத்துவ உயர் கல்வியைப் பெறுவார். இவர் இம் மாத இறுதியில் அங்கு செல்வார். (12)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "வடக்கு - கிழக்கை இணைப்பதற்கான சர்வஜனவாக்கெடுப்பை எதிர்க்கிறோம்"

(விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வெளியீட்டுப் பிரிவு 'நீதியும் உண்மையுமே எமது நிலைப்பாடு' என்ற தலைப்பில் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கும் ரூபவாஹினிக்கும் அளித்த பேட்டியின் தொகுப்பை நூலாக வெளியிட்டுள்ளது. அவற்றில் இருந்து சில பகுதிகள்.) (ஆ-ர்)

## கேள்வி - பதில்

கே: தமிழீழ விடுதலைப் புலிகள் ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களுக்கு எதிரான வன்முறையில் பெரிய அளவில் ஈடுபடுவதாக இங்கு ஒரு கருத்து நிலவுகிறது. என்ன சொல்கிறீர்கள்?

ப: அம்பாறையிலும் - மட்டக்களப்பிலும் உள்ள நிலைமை வேறுபட்ட தகைமை உடையது. கடந்த 3 அல்லது 4 மாதங்களில் அமைக்கப்பட்ட தமிழ் தேசிய இராணுவம் - ஈ. பி. ஆர். எல். எவ் குழுவினரால் பலாத்காரமாகக் கடத்திச் செல்லப்பட்ட பள்ளிக்கூட மாணவர்களைக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆயுதங்களைப் பயன்படுத்த அவர்களுக்கு 2 மாத பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. பின்பு அவர்களுக்கு சிகரெட்டுகள், மதுபானம், நீலப்படங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை ஆயிரத்துக்கும்மேற்பட்ட தமிழ்த் தேசிய இராணுவ உறுப்பினர்கள் எங்களிடம் சரணடைந்திருக்கிறார்கள். தமிழ்த் தேசிய இராணுவம் என்பது இந்திய அமைதிப்படையால் எங்கள் மண்ணில் உருவாக்கி, உலாவவிடப்பட்ட ஒன்று. தமிழ் தேசிய இராணுவத்திறகு பீரங்கிகள், சிறுரக ஏவுகணைகள் போன்ற கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைப் பத்துக்கும் இருபதுக்கும் இடையிலுள்ள வயது இளைஞர்கள் பயன்படுத்துகிறார்கள். இச்சிறுவர்கள் பொதுமக்களை அடிக்கிறார்கள். துன்புறுத்துகிறார்கள். வீடுகளுக்கு தீ மூட்டுதல் கொலை புரிதல் போன்ற கொடுஞ் செயல்களில் ஈடுபடுகிறார்கள். இந்திய அமைதிப்படை வெளியேறிய பகுதிகளில் இவர்களின் கொடுமைகள் சொல்லுந்தரமன்று. இந்நிலையில்தான் தமிழ்த் தேசிய இராணுவத்தினரை சரணடையும்படி நாங்கள் கேட்டுள்ளோம். பெரும்பாலானோர் சரணடைந்து கொண்டிருக்கிறார்கள். ஈ. பி. ஆர். எல். எவ். குழுவினால் சிலர் கட்டாயப்படுத்தப்பட்டு உள்ளேயிருந்து வெளியேற முடியாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். மக்களைப்பாதுகாக்கும் நோக்கோடு நாங்கள் சில இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. நாங்கள் மக்களைக் கொல்கிறோம் என்பது தவறான குற்றச்சாட்டாகும். தமிழ்த்தேசிய இராணுவம சிங்களப் பொலிஸ் நிலையங்களின் மீதும் - சிங்கள இராணுவ நிலையங்களின் மீதும் தாக்குதல் நடத்தி இருக்கிறது. சிங்கள இராணுவத்தை, இதனால் தமிழர் முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டிவிடலாம் என்றும் - இதை வைத்துக் கொண்டு சிறீலங்காப்படைகளோடு சேர்ந்து விடுதலைப்புலிகள்தமிழர்களைத் தாக்குகிறார்கள் என்றபொய்ச் செய்தியைக் கட்டவிழ்த்து விடலாம் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். இதுதான் தேசிய இராணுவத்தின் தந்திரம். இதை நாங்கள் அனுமதிக்க முடியாது. இத்தகைய திட்டமிட்ட தூண்டுதல்களால் உந்தப்பட்டு தமிழ்த் தேசிய இராணுவத்தின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம்' என்று நாங்கள் ஜனாதிபதி பிரேமதாசா அவர்களைக் கேட்டுள்ளோம். சிறீலங்கா இராணுவம் தமிழர்களைக் கொல்கிறது பாருங்கள்' என்று காட்டி இந்திய படையை தமிழீழத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்வதும் தமிழ்த்தேசிய இராணுவத்தின் இன்னொரு உள்நோக்கமாகும்.

கே: ராஜீவ் காந்தியின் சிறீலங்கா கொள்கை பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: ராஜீவ் காந்தியின் கொள்கை ஒரு பேரழிவாகவே முடிந்தது. அவரால் அனுப்பப்பட்ட இந்திய அமைதிப் படை தமிழ் மக்களைப்பாது காக்கத் தவறியது. அவருடைய குறிக்கோள் தோல்வியடைந்தது.

கே: இலங்கையில் போராடும் அனைத்து போராளிக் குழுக்களும் இணைந்து ஒரு 'செட்டில்மெண்டு'க்கு வந்தால் என்ன?

ப; 1972-ம் ஆண்டிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம்தான் போராடி வருகிறது. மற்ற இயக்கங்கள் எல்லாம் நீண்ட காலத்துக்குப் பின்னால்தான் தோன்றின. சில இயக்கங்கள் முந்தைய டில்லி நிர்வாகத்தால் 'றோ' போன்ற உளவு ஸ்தாபனத்தால் உருவாக்கப்பட்டன. இவர்கள் மக்களுக்காகப்போராடவில்லை. முந்தைய இந்திய அரசின் கூலிப்படையாக அடிவருடிகளாகச் செயற்பட்டுவந்தனர். இவர்களை புனிதமான இலட்சியத்திற்காக இரத்தம் சிந்திப் போராடும் விடுதலைப் புலிகளோடு ஒப்பிடமுடியாது. இதை நாங்கள் சொன்னால் சரியாக இருக்காது. உண்மையான போராளிகள் யார்? போலியானவர்கள் யார்? என்ற முடிவைத் தமிழீழ மககள்வழங்கவேண்டுமென்பதுதான் எங்களுடைய விருப்பம். அதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க மக்கள் தீர்ப்பளிக்கட்டும். இதற்கு மத்திய மாநில அரசுகள் உதவ வேண்டும் என்று விரும்புகின்றோம்.

கே: மக்களுக்கு இந்திய அமைதிப்படை பாதுகாப்பு வழங்கவில்லை என்று கூறினீர்கள் யாருக்கு எதிராக?

ப: இது அர்த்தமற்ற கேள்வி சிறீலங்கா இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தத்தை உறுதி செய்யவே இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டது. ஆனால் நாட்டில் வந்து இறங்கியதும் அவர்களே போரில் இறங்கினார்கள். விடுதலைப் புலிகளுக்கு எதிராக (டில்லி அரசின் முடிவுதான்) அமைதிப்படையின் நோக்கமே தோற்றுப்போனது.

கே: நீங்கள் எம். ஜி. ஆர். ராஜீவ்காந்தி - கருணாநிதி ஆகியோருடன்பேசியிருக்கிறீர்கள். உங்கள் கருத்தின்படி யார் நல்லவர்கள்?

பதில்: திரு. கருணாநிதி 30 ஆண்டுகளாக தமிழர் போராட்டங்களோடு தன்னை இணைத்துக் கொண்டுள்ளவர். தமிழ்த் தலைவர்கள் அனைவரையும் நன்கு தெரிந்தவர்.

கே; எம். ஜி. ஆர் தமிழர்களுடைய பிரச்னையைத் தீர்க்கவில்லை என்கிறீர்களா?

ப: அதைப்பற்றி நான் எதுவும் குறிப்பிட விரும்பவில்லை. எம். ஜி. ஆர். எமக்குப்புரிந்திருக்கும் உதவிகள் வேறுபட்டவை. எமக்கு அவர் பெருந்துணையாக இருந்தார். வேறுபட்ட ஒரு வரலாற்றுக் காலத்தில் வேறுபட்ட ஒரு கட்டத்தில் எமது நிலைமையை புரிந்து கொண்டு அவர் உதவினார். இந்த இரு தலைவர்களையும் நாங்கள் ஒப்பீடு செய்ய விரும்பவில்லை. நாங்கள் ஒன்றைச் சொல்ல முடியும்; எம். ஜி. ஆர் அவருடைய காலத்தில் தனது பங்களிப்பை முழு அளவில் செய்தார். இன்று எமது பிரச்னையைப் புரிந்து கொண்டு எமக்கு உதவும் ஒரு வாய்ப்பு, திரு. கருணாநிதிக்கு கிடைத்துள்ளது

கே: வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்காக ஒரு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதில் கலந்து கொள்வீர்களா?

ப: இதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நாங்கள் முற்றாக எதிர்க்கிறோம்.

கே; சிறீலங்காவின் தலைமையை நம்புகிறீர்களா?

ப; நாங்கள் கொழும்பில் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது - சிறீலங்காவின் புதிய தலைமை - ஜனாதிபதி தமிழர்களின் நியாயபூர்வமான பிரச்னைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று விரும்புவதை அறிந்தோம். இன்றும் நாங்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். ஜனநாயக நடைமுறையை ஏற்றுக்கொண்டு- அரசியல் நீரோட்டத்தில் கலக்க நாங்கள் முன்வந்து, பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதன் மூலம் சிறீலங்கா அரசுக்கு ஒருவாய்ப்பினை வழங்கியுள்ளோம். சிறீலங்கா அரசு எம்மைஏமாற்றினால், எமக்குத் துரோகம் செய்தால் போராட்டத்தைத்தவிர எமக்கு வேறு வழி இருக்காது.

கே: சிறீலங்காவில் இந்தியத் தலையீட்டை நிறுத்தவேண்டும் என்றும், இந்தியா ஒதுங்கிய பின்பு-தமிழீழ விடுதலைப் புலிகளால் நிலைமையைச் சமாளிக்கமுடியும் என்றும் நினைக்கிறீர்களா?

ப: இதுபற்றி நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். சிறீலங்காவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் உறவுகள் சீரடைய வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். டில்லி அரசு நிர்வாகத்துக்கும்-விடுதலைப் புலிகளுக்கும் இடையிலும் கூட உறவுநிலை சீரடைய வேண்டும் என்றே கருதுகிறோம். எமது தமிழீழ மக்களின் உணர்வுகளையும், விருப்புகளையும் கருத்திற்கொண்டு, இந்திய அரசு சிறீலங்கா மீதான தனது வெளிநாட்டுக் கொள்கையைப் புதிதாக வகுக்க வேண்டும் என்று விரும்புகிறோம். இது இராணுவ ரீதியான தலையீட்டிலிருந்து வேறுபட்டதாகும்.

கே; தனி ஈழம் கோரிக்கையைக் கைவிட்டு விட்டீர்களா?

ப: இந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அதுபற்றிக் கருத்துத் தெரிவிப்பது அறிவுடைமை ஆகாது என்று கருதுகிறேன். இன்று நாங்கள் சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். தமிழீழக் கோரிக்கையை நாம் கைவிடவில்லை.

---

# இப்படியும் நடக்கிறது

"பெற்றோர் உயரமானவர்களாக இருந்தால் பிள்ளைகளும் உயரமாக இருப்பார்கள். பெற்றோர் உயரம் குறைந்தவர்களாக இருந்தால் பிள்ளைகளும் பெற்றோரைப் போலவே இருப்பார்கள்",

— இது ஒரு பொதுவான கருத்தாகும்.

இந்தக் கணிப்பை முறியடித்திருக்கின்றார் அமெரிக்க மாது ஒருத்தி.

அவள் பெயர்; குளோரியா சாமுவல். உயரம் இரண்டு அடி, ஒன்பதரை அங்குலம். (இவர்தான் அமெரிக்காவின் மிகவும் உயரம் குறைந்த (குள்ளமான) தாய். இவருக்கு ஒரு மகனும் மகளும் உண்டு. மகனுக்கு வயது பதினான்கு. உயரம் ஆறு அடி. நிறை 169 றாத்தல். மகளின் வயது பத்து. உயரம் நான்கு அடி பதினொரு அங்குலம்.

உயரம் குறைந்த மக்கள் சம்பந்தமான அமெரிக்க நிறுவனத்தின் தலைவர் திரு. ஹரி மக்டொனால்ட் இப்படிக் கூறுகின்றார்; "உயரம் குறைந்த தாய் ஒருத்திக்கு மிகவும் உயரமான பிள்ளைகள் பிறந்திருப்பதை இப்பொழுதுதான் நான் முதல்தடவையாக அறிகின்றேன்"

ஒரு மேலதிகத் தகவல்: உலகிலேயே மிகவும் உயரம் குறைந்த (குள்ளமான)பெண்மணி மஜிபெஸ்ரர். இவளது உயரம்: இரண்டு அடி ஒன்றேகால் அங்குலம்.

— ஊடுருவி

---

## கந்தபுராண வகுப்பு

(பருத்தித்துறை)

தென் புலோலி புற்றளை சித்தி விநாயகராலயத்தில் "கந்த புராண வகுப்பு" ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வகுப்பு ஒரு வருடகாலத்திற்கு நடாத்தப்படும். வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் புற்றளைச் சித்தி விநாயகராலய பிரதம குரு பிரம்மஸ்ரீ எஸ் விஜயரத்தினக் குருக்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (52)

## மின்துண்டிப்பு எச்சரிக்கை

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் தென் மேற்குபிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பகுதியில் மின்சார நிலுவைப்பணம் கடந்த ஜனவரி மாதம் 31-ம் திகதி வரை செலுத்தாமலிருக்கும் மின் பாவனையாளர்களுக்கு இறுதி அறிவித்தல் (சிவப்பு நோட்டீஸ்) கொடுக்கப்பட்டுள்ளது. 48 மணித்தியாலங்களுக்குள் நிலுவைப் பணத்தை செலுத்தி பற்றுச்சீட்டை பெறத்தவறினால் மின்சார விநியோகம் முற்றாக துண்டிக்கப்படுமென்று இதில் எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (72)

## கல்வி அலுவலகத்துக்கு நிரந்தர கட்டடம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்திற்கு 15 லட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடம் இவ் வருடத்தில் நிறுவப்படவுள்ளது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலுள்ள கட்டிடம் ஒன்றில் வசதியீனங்களுக்கு மத்தியில் இப்போது இயங்கி வரும் இந்த அலுவலகத்தை பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு பக்கத்திலுள்ள காணியில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. புதிய கோட்டக் கல்வி அலுவலகம் கல்வி அதிகாரிகள் பகுதி, சம்பளப்பகுதி, கணக்குப்பகுதி, மாநாட்டு மண்டபம், வாகனம் நிறுத்துமிடம் ஆகிய பல்வேறு பகுதிகளை உள்ளடக்கியதாக அமையுமென்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

## நேர்முகப் பரீட்சை

(பண்டத்தரிப்பு)

பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 28 ம் திகதி புதன் கிழமையன்று பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. (72)

## தொழிற்பயிற்சி நெறிகள் 5-ல் ஆரம்பம்

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக்கல்லூரியில் இவ் வருடத்திற்கான தொழிற்பயிற்சி நெறிகள் அடுத்தமாதம் 5ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பயிற்சி நெறிகளுக்கு இம்முறை அதிகமான இளைஞர்களும், யுவதிகளும் விண்ணப்பித்திருந்ததாகவும், இவர்களுக்கு நேர்முகப்பரீட்சைகள் நடத்தப்பட்டு தகுதியானவர்கள் அனுமதிக்கப்படுவார்கள். என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில வருடங்களாக நிலவியபதற்ற நிலைமைகளினாலும் அசம்பாவித சம்பவங்களினாலும் இக் கல்லூரியில் நடைபெற்ற பயிற்சி நெறிகளுக்கு மாணவர்கள் வருகை மிகவும் குறைவாகவிருந்தது. இவ் வருடம் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலிருந்தும் பெருந்தொகையானவர்கள் பயிற்சி நெறிகளில் பங்குபற்ற அனுமதி கோரி விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளனர். [72]

## விசேட சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பாடவிதான துறையின் சார்பில் கடந்த மாதம் திருமலையில் நடைபெற்ற ஆண்டு 6—11 வகுப்புகட்கான கணித ஆலோசகர்களின் கருத்தரங்கில் கலந்துகொள்ளாத ஆசிரியர்கட்கான விசேட சேவைக் காலப் பயிற்சி நெறி இம்மாதம் 27ம் திகதி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பயிலுநர்
# தீவுப்பகுதியில் தெரிவானோர் விபரம்

(புங்குடுதீவு)

ஊர்காவற்றுறை, காரை நகர், நெடுந்தீவு, அனலைதீவு, வேலணை, புங்குடுதீவு, மண்டைதீவு, நயினாதீவு ஆகிய பகுதிகளில் ஆசிரிய பலுநராக நூற்றுயொரு பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களது சுட்டிலக்கம், பெயர், விலாசம், பெற்ற மதிப்பெண் ஆகியன கீழே தரப்படுகின்றன.

882 ச. வசந்தகுமாரி வேலணை (617), 946 ஐ. பவானி வேலணை (610), 09 வே. ஆன்கத்தறீன் அன்ரலா மண்டைதீவு (599), 22 இ. பத்மராணி புங்குடுதீவு (583), 391 அருந்தவராணி வேலணை (581), 988 க. பவானி புங்குடுதீவு (578), 60 க. பாமா வேலணை (578), 557 ஐ. வனஜமலர் சரவணை கிழக்கு, வேலணை, 45 ம. லலிதா புங்குடுதீவு (572), 102 க. பரமேஸ்வரி சரவணை கிழக்கு, வேலணை 572, 182 ஐ. சத்தியபாமா புங்குடுதீவு (569), 14 ச. சாந்தகுணேஸ்வரி மண்கும்பான் மேற்கு வேலணை (566), 58 வி. விஜயகுமாரி வேலணை (562), 629 ம. ஜெயந்தி சரவணை கிழக்கு வேலணை (565), 905 பொ. வசந்தா வேலணை (562), 1022 நா. மா. இராஜேஸ்வரி மண்டைதீவு (561), 420 க. விமலேஸ்வரி வேலணை (559), 426 பி. சுகந்தினி அல்லைப்பிட்டி (557), 1004 கை. அனுசியா புங்குடுதீவு (553), 06 கு. திலகவதி மண்டைதீவு (552), 421 ச. பவானி வேலணை (557), 678 கா. நந்தினி வேலணை (550), 886 செல்வி ச. வள்ளிநாயகி வேலணை (550), 187 பெ. சந்தானலட்சுமி வேலணை (545), 633 க. சண்முகம் பிள்ளை சரவணை, வேலணை (544), 02 செல்வி செ. உதயா வேலணை (544).

கிறிஸ்தவம் ரோ. க.

90 சினமன்ரா அமலேஸ்வரி அல்லைப்பிட்டி (645), 92 மேரி பியற்றஸ் மண்டைதீவு (622), 93 செல்வி தி. இதயமலர் மண்டைதீவு (603).

கிறிஸ்வம் (ரோ. க. அல்லாதது)

1085 செ. எமிபெல் சுபாஷினி புங்குடுதீவு 428,

சிங்களம்

88 பு. பௌஸியாப்ப வேலணை (210).

தமிழ்

1086 சு. மகாராணி புங்குடுதீவு (619), 101 செ.ஞ. செல்லாம்பிகை வேலணை (611), 169 ந. நந்தினி நயினாதீவு (611), 1030 சோ. வசந்தமாலினி மண்டைதீவு (586).

கணிதம்

27 இ. மதிவதனு வேலணை (541).

விஞ்ஞானம்

121 வி. எஸ். ஏ. பிறேமஜெயா புங்குடுதீவு (532), 120 ப. மோகேந்திரன் நயினாதீவு (528), 115 நா. பக்தகௌரி வேலணை (511).

ஆங்கிலம்

100 இ. இராஜேஸ்வரி சரவணை வேலணை (641), 510 இ. மதிஹரன் வேலணை (578) 103 திருமதி த. பவானிதேவி சரவணை வேலணை (565).

வர்த்தகம்

628 ந. லோகநாயகி சரவணை வேலணை (721), 128 து. இன்பமலர் சரவணை கிழக்கு வேலணை (532), 184 க. சாந்தகுமாரி வேலணை (523).

சமூகக்கல்வி

912 ப. புற்கலை புங்குடுதீவு (571), 820 மா. மணிமாலா சரவணை வேலணை (576), 978 நீ. சீ. சுபாஸ்சந்திரன் சரவணை மேற்கு, வேலணை (537).

சித்திரம்

359 து. பத்மபூரணகுமாரி புங்குடுதீவு (569), 1070 உ. திரிபுராம்பாள் நயினாதீவு (511), 799 ஐ. செல்வராணி புங்குடுதீவு (499).

சங்கீதம்

12 து. இராசேஸ்வரி புங்குதீவு (501), 415 சா. வாசுகி வேலணை (628), 411 செ. மங்களேஸ்வரி வேலணை (559), 597 சு. மோகனராணி புங்குடுதீவு (531), 542 க. வசந்தமாலா புங்குடுதீவு (527), 160 ந. முத்துராணி மண்டைதீவு (517),

நடனம்

165 ச. நளாயினி வேவணை (512), 166 அ. லூசியாகிறேஸ் புங்குடுதீவு (481), 374 ச. ரேவதி புங்குடுதீவு (328).

விவசாயம்

675 இ. இராசேஸ்வரன் வேலணை (595), 172 க. வசந்தராணி நயினாதீவு (578).

மனைப்பொருளியல்

178 ந. உமாதேவி வேலணை (583), 870 த. சாரதாமணி புங்குடுதீவு (532).

வர்த்தகம்

99 ச. ஞானவசந்தி வேலணை (781), 910க. ஜீவசலன் நயினாதீவு (580), 143 கலாரஜனி வேலணை (579).

சுருக்கெழுத்து

183 இ. நகுலேஸ்வரி நயினாதீவு (383).

ஆரம்ப ஆசிரியர்

0061 கே. மேனகா நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறை (657), 0168 வி. பாரதா எழுவைதீவு (65)8, 460 ரி. சிந்தனைச்செல்வி காரைநகர் (647), 413 ரி. இன்பவதனி காரைநகர் (633], 0096 ரி. வாசுகி புளியங்கூடல் ஊர்காவற்றுறை (625). 14 ஐ. புஷ்பராணி காரைநகர் (612), 553 பி. சரோஜினி நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை (568) 548 ஆர். ராஜேஸ்வரி காரைநகர் (606).

கிறிஸ்தவம் ரோ. க.

85 பி. அருட்செல்வி காரைநகர் (62).

தமிழ்

113 செல்வி பி இராஜேந்திரம் கரம்பொன் கிழககு (647).

கணிதம்

233 ஜே. ஆர். ராஜேந்திரம் நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறை (653)

விஞ்ஞானம்

878 எஸ். பிரபாகரன் காரைநகர் (637).

ஆங்கிலம்

64 எஸ். கேமா நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறை (659), 659 கே. கலைச்செல்வி கரம்பொன் கிழக்கு (590).

சமூகக்கல்வி

456 செல்வி ஏ. கணபதிப்பிள்ளை காரைநகர் (593), 515 எஸ். ஜெயகௌரி புளியங்கூடல் ஊர்காவற்றுறை (690).

சித்திரம்

50 எஸ். தனேஸ்வரி நாரந்தனை கிழக்கு ஊர்காவற்றுறை (661) 49 எம். [illegible] கன்னிகா கரம்பொன் [illegible] ஊர்காவற்றுறை (546).

சங்கீதம்

56 ந. விமலேஸ்வரி கரம்பொன் கிழக்கு சுருவில் (600), 038 எஸ். சசிகலா நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறை (550).

நடனம்

07 வி. ஞானம்பிகை காரைநகர் (491), 14 எஸ. கனகாம்பிகை காரைநகர் (437).

விவசாயம்

35 ஆர். ராஜினி கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறை.

வர்த்தகம் 412 எஸ். செல்வராணி காரைநகர் (590).

ஆரம்ப ஆசிரியர்

105/0050 ஏ. கேதீஸ்வரி நெடுந்தீவு (707). 0002 பி. ஜே. சாந்தினி நெடுந்தீவு (6‧5), 0055 ரி. தவமணி நெடுந்தீவு (619), 0086 எஸ். செந்தில்நாயகி நெடுந்தீவு (590), 0004 கே. கலாநிதி நெடுந்தீவு (545).

கணிதம்

0038 எஸ். கோகுலநாதன் நெடுந்தீவு (573).

ஆங்கிலம்

0080 கே. கணேசமூர்த்தி நெடுந்தீவு (556).

சித்திரம்

0150 க. [illegible] சுமி நெடுந்தீவு (526).

ஹவுஸ் புல்!!!
ஹரன் யாழ்.
10-30, 2-30, 4-30, 6-30
கமலஹாசன்
சரண்யா
நாயகன்

## வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட
## கடற்றொழிலாளர்களுக்கு உதவ
# மாகாண சபை நடவடிக்கை

(திருமலை)

கடந்தகால வன்செயல்களினால் வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட 60 298 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு 13,000 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு புனரமைப்புத் திட்டங்களை மேற்கொள்ள மாகாண கடற்றொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது

'நோராட்' நிறுவனம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளருக்கும் அவுஸ்திரேலியா— திருமலை, அம்பாறை மாவட்டங்களில் பாதிககபபட்ட கடற்றொழிலாளருக்கும் உதவ முன்வந்துள்ளன. ஐக்கிய நாட்டு அகதிகள் உயர்ஸ்தானிகராலயம். இந்தியாவிலிருந்து திரும்பிய அகதி கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு உதவ முன்வந்துள்ளது.

இதேவேளை மீன்பிடித்துறை சார்ந்த கட்டிடங்கள், வள்ளங்கள், லொறிகள் போன்றவற்றை மறுசீரமைக்க ரேப்பியா 2 இலட்சம் ரூபா வரையான கடன்களை வழங்கிவருகிறது. மக்கள்வங்கி, ஹட்டன் நஷனல் வங்கி ஆகியனவும் மீனவருக்கான கடன்களை வழங்கி வருகிறது.

அத்துடன்ஆசிய அபிவிருத்தி வங்கி கடற்றொழில்துறை சார்ந்த கட்டிட நிர்மாண வேலைகளுக்காகவும், வாகனங்கள் மற்றும் தளபாட உபகரணங்களுக்காகவும், 41·7 மில்லியன் ருபாவை வழங்கியுள்ளது.

கடந்த ஆண்டு ஐக்கியநாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகராலயம் 120கண்ணாடி இழைப் படகுகள், 120 வெளியிணை யந்திரங்கள், 120 தொகுதி மீன்பிடி உபகரணங்கள், 16 வள்ளங்கள் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கடற்றொழிலார்களுக்கு உற்பத்தித்திறன் வாய்ந்த நன்கொடையான நோராட் நிறுவனம் 60மில்லின் ரூபாவை கடந்த வருடம்கடனுகை வழங்கியுள்ளது.

இவ்வாண்டு மன்னார்மாவட்டத்திலுள்ள பேசாலையில் மீன்பிடிப் பயிற்சி நிலையத்தை அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும். இதற்காக சுவிர்சலாந்து 34 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலுள்ள மீன்பிடிப் பயிற்சி நிலையங்களுக்கான உபகரணங்களை கொள்வனவு செய்ய பிரிட்டின் 21 மில்லியன் ரூபாவை வழங்க ஒப்புக் கொண்டுள்ளது. மீன்பிடி பயிற்சி நிலையக்கட்டிடங்களைப் புனரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி வசதிகளை வழங்க முன்வந்துள்ளது.

அவுஸ்ரேலியா, திருமலை அம்பாறை மாவட்டங்களிலுள்ள கடற்றொழிலாளருக்கு உற்பத்தித் திறன்வாய்ந்த கொடுப்பனவாக 18.6 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட வாவி கடற்றொழிலாளருக்கு 6 மில்லியன் ரூபா செலவில் மீன்பிடி உபரணங்களை வழங்கவும்அவுஸ்ரேலியா ஒப்புக் கொண்டுள்ளது.

இந்தியா 6.1கோடிரூபாவை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உபகரணங்களை வழங்கவும், ஐஸ்கட்டித் தொழிற்சாலைகளை அமைக்கவும், கடற்றொழில் வேலைத்தலங்களை அமைக்கவும் இறால் பண்ணைகளை அமைக்கவும் வழங்கியுள்ளது.

## புதிய கட்டிடம்

(அச்சுவேலி)

வளலாய் அமெரிக்க மிசன் பாடசாலைக்கு 5 லட்ச ரூபா செலவில் புதிய கட்டிடம் அமைக்கப்படவுள்ளது. மேலும் கட்டிட திருத்த வேலைகளுக்கு ஒரு லட்சமும் ஒதுக்கப்பட்டது. அண்மைக்கால இராணுவ நடவடிக்கையால் மிக மோசமாக சேதமடைந்த பாடசாலைகளில் இதுவுமொன்ருகும்— (ம)

## சேவையிலிருந்து ஓய்வு

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் திணைக்களத்தைச் சேர்ந்த முதலாம்தர லிகிதர் திரு. எஸ். கந்தசாமி பிரதம லிகிதர் எஸ். ஜீவராஜ் அண்மையில் சேவையிலிருந்துஓய்வு பெற்றுள்ளார்கள். (ம)

## 34 மாணவர் சித்தி

(வட்டுக்கோட்டை)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலையிலிருந்து முப்பத்தி நான்கு மாணவர்கள் 5-ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் அதிக மாணவர்களைக் கொண்ட ஆரம்ப பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது. (139)

## நெடுந்தீவுக்கு உழவு இயந்திரம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு வாழ் மக்கள் பல அடிப்படை வசதிகள் இல்லாமல் நெடுங்காலமாக வாழ்ந்து வருகின்றார்கள். இதைக்கருத்திற் கொண்டு யாழ்ப்பாண கமநல சேவைகள் நிலையம் ஒரு உழவு யந்திரத்தை நெடுந்தீவு மக்களுக்கு வழங்க முன்வந்திருக்கிறது,

நெடுந்தீவு விவசாயிகள் இதனால் பலனை அடைவதோடு விவசாய உற்பத்தியையும் பெருக்கிக்கொள்ள முடியும் என்று அதிகாரிகள் தெரிவித்தார்கள். (ம)

## மாமரங்களை காப்பாற்றுங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடு முழுவதுப் மூன்று வருடங்களாக மாமரங்கள் காய்க்கவில்லை. நோய் பிடித்ததே இதற்குக் காரணம். பூவும், பிஞ்சும் காய்ந்து கருகிப்போவதுதான் நோயின் தன்மை.

இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ். கமநலசேவைகள் நிலையம் மூன்று தெளிகருவிகளை கொழும்பிலிருந்து தருவித்து இருக்கிறார்கள். யாழ். குடாநாடு முழுவதும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் இச் சேவைகளை யாழ். மக்கள் பயன் படுத்திக்கொள்ளலாம் என்று கமநலசேவைகள் நிலையத்தினர் தெரிவிக்கின்றார்கள். (ம)

## தொழிற் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் ஜனசக்தி திட்டத்தின் கீழ் உதவிபெற்று வரும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களும் உறுப்பினர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

உறுப்பினர்களின் கல்வித் தகைமை, தொழில் ஆர்வம் என்பவற்றிற் கேற்பவே இத் தொழிற்பயிற்சி அமையும் என தெரிவிக்கப்படுகிறது. (56)

## 'சார்ள்ஸ்'சின் நான்கு சிறுகதைத் தொகுதிகள்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் 'சார்ள்ஸ்'சின் நான்கு கவிதைத் தொகுதிகள் வெளியீட்டுவிழா முஸ்லிம் லீக் வாலிப முன்னணிக் கூட்டத்தில் இடம் பெற்றது.

எழுத்தாளர்களான திரு. கே. எஸ். சிவகுமாரன் அந்தனி ஜீவா, வி. என். எஸ். உதயச்சந்திரன் ஆகியோர் நூலைப் பற்றிவிமர்சனம்செய்தார்கள். (ம)

## ஆரம்ப சுகாதார நிலையம்

(காங்கேசன்துறை)

செஞ்சிலுவைச் சங்க ஆதரவில் வீமன்காமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு அதன் மூலம் சுகாதார நல சேவைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இந்த ஆரம்பசுகாதார நிலையத்துடன் இணைந்தாற்போல மருத்துவமாது வதிவிடமும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தில் தாய், சேய் நலன் பேணுதல், நோய் தடுப்பு வழிமுறைகள், சூழல் சுகாதாரம் பேணுதல், சுகாதார ஆலோசனைகள் வழங்குதல் போன்ற பல்வேறு பணிகள் இடம்பெற்றுவருகின்றன.

மாதம் இருதடவை விசேட வைத்திய சிகிச்சையும் இடம் பெற்றுவருகிறது. (86)

## சாரணர் அங்குரார்ப்பண வைபவம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலய சாரணர் அங்குரார்ப்பண வைபவம் வித்தியாலய அதிபர் திரு. த. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் சிறப்பு விருந்தினராகவும் கொத்தணி அதிபர் திரு. ப. அரியரெத்தினம் திரு. ஜே. எம். பி. ஜெயராசா, சாரண ஆசிரியர் திரு. மா. புவனேந்திரன், சாரண ஆணையாளர் திரு. கே. கோபாலகிருஷ்ணன்ஆகியோரும் பங்குபற்றினார்கள். (83ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை

**- நெடுமாறன்**

[புலோலி]

''ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஈடு இணை எதுவும் இல்லை. மக்கள் காட்டிய மன உறுதியாலும் புலிகளின் விடுதலைப் போராட்டத்தினாலுமேயே இந்தியப்படை ஈழத்திலிருந்துவாபஸானது.''

இவ்வாறு தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. பா. நெடுமாறன் தென் புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய முன்றலில் கடந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஈழத்தில் இந்திய அமைதிப் படை இழைத்த அநீதிகளையும் கொடுமைகளையும் ஊர் ஊராகச் சென்று பார்த்து வேதனையடைந்தேன். இந்திய அமைதிப்படை ஈழத் தமிழர்களுக்கு பாதுகாப்புக கொடுக்காமல் தமிழ்மக்களின் போராட்டத்தைஒடுக்கவே நடவடிக்கை எடுத்தது.

இந்தியப்படையை வெளியேற்றுமாறு கோரி தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை நடத்தினோம். இந்த ஆர்ப்பாட்ட போராட்டங்களினால்இந்தியப் படை வெளியேறவில்லை. புலிகளின் போராட்டத்தினாலும் மக்கள் அனைவரும் நிமிர்ந்து உறுதி காட்டியதனாலுமேயே இந்தியப்படை வெளியேறியது. இந்திய இராணுவம் ஒரு சில மணி நேரத்துக்குள் போராட்டத்தினை ஒடுக்கிவிடும் என இந்தியாவில் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரண்டு ஆண்டுகள் கழித்து இந்திய இராணுவத்தை வெளியேறச்செய்துள்ளீர்கள். இது உலகத் தமிழருக்கு பெருமையைத் தேடித்தந்துள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்துக்கு ஈடு இணை எதுவும் இல்லை.

ஈழத தமிழ் மக்கள், இந்தியப்படை இங்கிருந்த இரண்டு வருடகாலத்தில் எத்தனையோ விதமான தொல்லைகள், உயிர் இழப்பு, சொத்து இழப்புக்களுக்கு மத்தியில் போராடி உள்ளார்கள் ஒவ்வொருவருக்கும் இழப்புகள் ஏற்பட்ட போதிலும், அது சமுதாய இழப்பு என நினைத்து நீங்கள் அனைவரும் போராடியுள்ளீர்கள். இவ்வெற்றியுடன் எல்லாம் முடியக்கூடாது. இம் மண்ணில் சுதந்திரப் இருக்க வேண்டும் மக்கள் சுதந்திரமாக நடைபோடவேண்டும். சுதந்திரக் கொடி பறக்கவேண்டும் அதுவரை போராட்டம் தொடரும்.'' இவ்வாறு அவர் கூறினார்

திராவிடர் கழகத்தைச் சேர்ந்தவரும், விடுதலைப் புலிகளின் தோழமைக் கழகத்தைச் சேர்ந்தவருமான திரு. இராமகிருஷ்ணன் பேசுகையில் கூறியதாவது:

சிங்கள, இந்திய இராணுவங்களை எதிர்த்துப்போராடி, அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச்செய்த நீங்கள், தமிழர்களுக்குப் பெருமை தேடித்தந்துள்ளீர்கள். மக்கள் தான் புலிகளுக்குப் பலத்தையும் சக்தியையும் கொடுத்துவருகிறார்கள். பிரபாகரன் உயிரோடு இல்லையென்று இந்தியாவிலும், இலங்கையிலும் பிரசாரம் செய்தார்கள். இதனை நாம் முறியடித்தோம். இந்தியாவின் 80 லட்சம் இராணுவத்தால் திரு. பிரபாகரனை மட்டுமல்ல, அவரது புலிக்குட்டியைக்கூடப் பிடிக்கமுடியாமற் போய்விட்டது. ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்தை உலகம் அங்கீகரிக்கும் நிலை வந்துவிட்டது'' என்றார். (61)

# பருத்தித்துறையில் தபால் நிலையக் கட்டிடத்தில் பொலிஸ் நிலையம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தபால் நிலையக் கட்டிடத்தில் ஸ்ரீலங்கா பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

பருத்தித்துறை ஸ்ரீலங்கா பொலிஸ் நிலையம் இதுவரை முதலாம் குறுக்குத்தெருவில் உள்ள தனியார் கட்டிடமொன்றில் இயங்கிவந்தது. பருத்தித்துறை தபால் நிலையக் கட்டிடத்தில் இந்திய இராணுவத்தினர் தங்கியிருந்து வந்தனர். அண்மையில் இந்திய இராணுவத்தினர் வெளியேறியதையடுத்தே தபால் நிலையக் கட்டிடத்தில் ஸ்ரீலங்கா பொலிஸ் நிலையம் செயற்படத் தொடங்கியுள்ளது. (52)

## மன்னாரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இயங்க உள்ளன.

இத்தகவலை அண்மையில் மன்னாருக்கு வருகைதந்த வவுனியா பொலிஸ் அதிபர் திரு எஸ். நவரெட்ணராஜா தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட இடங்களில் பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை மன்னார் பொலிஸ் உதவி அதிபர் திரு. எஸ். இராசரெட்டினம், தலைமைக் காரியாலய பொலிஸ் அதிகாரி திரு ஏ. அரசரெத்தினம் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்

## இரு குழந்தைகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யடைந்த நிலையில் காணப்பட்டதாகவும், தான் தன் கணவனிடம் செல்லப்போவதாக அடிக்கடி கூறிவந்ததாகவும், சம்பவதினம் காலை இவர் சத்தி எடுப்பதைப் பார்த்து விசாரித்தபோது முன்னிரவு இவர் குழந்தைகளுக்கு கிருமி நாசினி குடிக்கக் கொடுத்து தானும் அதைக்குடித்து படுத்திருந்ததாகத் தெரிவித்தார். உடனே படுக்கையில் சென்று பார்த்த போது ஒருகுழந்தை இறந்தும், அடுத்த குழந்தை மயக்கமுற்ற நிலையிலும் இருக்கக் காணப்பட்டது. உடனே தாயையும் மயக்கமுற்ற குழந்தையையும் எடுத்துக்கொண்டு தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்கு சென்று அங்கு அவசரசிகிச்சையளித்த பின் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றனர். தீவிரசிகிச்சைக்குட்படுத்திய சமயம் தாய் இறந்ததாகவும் இறந்தவரின் மூத்த சகோதரர் இருவர் மரணவிசாரணையின்போது சாட்சியமளிக்கையில் தெரிவித்தனர்.

காலஞ்சென்றவர் இறப்பதற்குமுன், தான் கிருமி நாசினியைக் குழந்தைகளுக்கு பாலில் கலந்து குடிக்கக் கொடுத்து, தானும் அருந்தியதாகவும், இறந்த தன்கணவனிடம் சென்றடைவதற்காகவே தான் இவ்வாறு செய்ததாகவும் தெரிவத்தார்.

இரத்தினம் மயூரன் என்ற ஆறுவயதுடைய மூத்த ஆண் குழந்தை யாழ். ஆஸ்பத்திரியில் தீவிரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணை முடிவில் இந்தச் சம்பவம் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

இறந்தவரின் சடலம் மரண விசாரணையின்பின் அவரது சகோதரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. [56]

## வடக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாம் பட்ட துயரச் சம்பவங்களை திரு. நெடுமாறனிடம் தெரிவித்தனர்.

இதே போன்று, வடக்கு-கிழக்கில் பல பகுதிகளிலும் தாம் இவ்வாறான விபரங்களைச் சேகரிக்கவுள்ளதாகவும், அமைதிப் படையினரின் நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடமிருந்து வெளிவராத பல துயரச் சம்பவ விபரங்களைத்தாம்சேகரித்துள்ளதாகவும்அவர்தெரிவித்தார்.

## ஈழ விடுதலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையான இந்தியாவினால் எம்மை அழிக்க முடியாமல் போனது எமது வீரம்மிக்க போராட்டம்தான் காரணம். இலங்கைத் தமிழ் மக்களில் பெண்கள்தான் ஆண்களிலும் பார்க்க கூடஉள்ளார்கள். ஆனபடியால் பெண்களாகிய நாம் எமது சுதந்திரப் போராட்டத்தில் முழுமையாக பங்கு பெறவேண்டும்'.

இவ்வாறு வண்ணார்பண்ணையில் நேற்றிரவு நடைபெற்ற மாணித்த வீரர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்க மகளிர் பேரவை தலைவி செல்வி ஆர்த்தி கூறினார்.

இக்கூட்டத்துக்கு லெப்டினன்ட் கேணல் ராதாவின் தந்தையான திரு எஸ். கனகசபாபதி தலைமை வகித்தார்.

அவர் மேலும் கூறியதாவது: ''கடந்த இருபது வருடங்களாக போராளிகள் இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பல்வேறு கோணங்களில் ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்களில் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தான் உறுதியான இயக்கம்'' என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் பெண்கள் உட்படபெரும் திரளான மக்கள் கலந்து கொண்டார்கள்.

## வடமராட்சியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு 100 ரூபாவும், க.பொ.த. உயர்தர கலை வர்த்தக வகுப்புகளுக்கு 80 ரூபாவும், 11ஆம் ஆண்டு வகுப்புகளுக்கு 70 ரூபாவும், 10ஆம் ஆண்டு வகுப்புகளுக்கு 65 ரூபாவும், 9 ஆம் ஆண்டு வகுப்புகளுக்கு 55 ரூபாவும், 8 ஆம் ஆண்டு வகுப்புக்கு 50 ரூபாவும், 7ஆம் ஆண்டு வகுப்புக்கு 40ரூபாவும் 6ஆம் ஆண்டு வகுப்புக்கு 35 ரூபாவும், 5ஆம் ஆண்டு வகுப்புக்கு 30 ரூபாவும், 4ஆம் ஆண்டு வகுப்புக்கு 25ரூபாவும் அறவிடுவதென தீர்மானிக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் வீடுகளில் தனிப்பட்ட வகுப்புக்கள் நடத்தும் ஆசிரியர்களும் தவறாது ஒன்றியத்தில் சேர்ந்து கொள்ளவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

வீடுகளில் கல்வி போதிக்கும் ஆசிரியர்கள் இரவு 8 மணி வரை பத்துக்குட்பட்ட மாணவர்களுக்கு பெற்றோர் ஆசிரியர்கள் பாதுகாப்புக் கொடுக்கும்பட்சத்தில் வகுப்புகள் நடத்த அனுமதிப்பது பற்றி விரைவில் ஆலோசித்து முடிவெடுக்கப்படும். [61]

# கசிப்பு விற்பனையை தடுக்க நடவடிக்கை

(காங்கேசன்துறை)

வலிகாமம் வடக்கில் சட்ட விரோதக் கசிப்பு விற்பனையைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் சகஜநிலை திரும்பியுள்ளதால் இவ்வாறான சட்ட விரோதச் செயலில் ஈடுபடுபவர்களைக் கண்டுபிடித்து, தகுந்த நடவடிக்கை எடுக்க தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இப்படியானசட்ட விரோதமான செயல்களைக் கைவிட்டு, சீவல் தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், உற்பத்தியைப் பெருக்கவும் ஒத்துழைக்கும்படி சங்கத்தினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (86-ம)

# நாவலர் பற்றிய பல ஆய்வுகளை மேற்கொண்டவர் கைலாசபதி

**- கவிஞர் முருகையன்**

(யாழ்ப்பாணம்)

'கைலாசபதி நாவலர்மேல் பற்றுக் கொண்டதற்குக் காரணம் யாழ். இந்துக் கல்லூரியில் படித்தது தான். அத்துடன் 'இந்து சாதனம்' பத்திரிகையில் அவர் அடிக்கடி எழுதியது நாவலர் மேல் ஈடுபாடு கொள்வதற்கு ஆதாரமாகவும் அமைந்துள்ளது. இதனால்தான் நாவலர் பெருமானை ஒருமுற்போக்குவாதியென பல ஆய்வுகளை மேற்கொண்டு நிலை நிறுத்தினார் கைலாசபதி''.

மேற்கண்டவாறு நேற்று யாழ்ப்பாண மக்கள் கலை இலக்கிய பேரவையினர் தொடர்ந்து நடாத்தும் கைலாசபதி நினைவுப் பேருரைக்கு தலைமை வகித்துப் பேசிய கவிஞர் முருகையன் குறிப்பிட்டார்.

நினைவுப் பேருரைத் தொடரில் திருமதி அம்மன்கிளி முருகதாஸ் 'நாவலர் ஆய்வும் கைலாசபதி ஆய்வும்' என்ற பொருள் பற்றிக் கட்டுரை வாசித்தார். (ம)

## வட பிரதேச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வைச் சமுகக் கடனுக வழங்கியுள்ளதாக வட பிரதேச மக்கள் வங்கி முகாமையாளர் திரு. கே. அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

இக்கடன், 100 ரூபா முதல் 500 ரூபா வரை வழங்கப்பட்டு வருகிறது. இக்கடனைக் கிரமமாகச் செலுத்துவதன் மூலம் 5,000 ரூபா வரை கடனுகப் பெறமுடியும் கடனைப் பெறுவதற்கு முகவர்களிடம் சென்று இணைப்பை ஏற்படுத்திப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார். (12)

## தேச விடுதலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டத்தில் தெரிவித்தார். இக்கூட்டத்திற்கு மறைந்த போராளி ராதாவின் தந்தை கனகசபாபதி தலைமை வகித்தார்.

சிவபாலன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

விடுதலைப் போராட்டத்தில் இதுவரை ஆயிரத்து முன்னூறு போராளிகளை இழந்துள்ளோம். இந்தப் போராளிகள் அனைவரும்மண்ணின்விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். அவர்களுக்கு எமது வீரவணக்கத்தைத தெரிவித்துக்கொள்கிறோம்.

தேசவிடுதலையை முன்னெடுத்துச் செல்கின்றபோது ஆயுதம் ஏந்திப் போராடுவது மட்டும் தேசவிடுதலையல்ல. ஒவ்வொருவரும் அதில் இணைந்து பங்கெடுப்பதன்மூலமே தமது விடுதலையைவிரைவாகஅடைய முடியும். இதனை நினைவில் கொண்டு இளையதலைமுறையினரை தேசவிடுதலையில் ஒருவர் ஒவ்வொரு பாடசாலையிலும் இணைப்பாளராக தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பு கிளைகளை நிறுவிவருகின்றோம்.

தமிழ்ப் பிரதேசங்களில் இன்று தனியார் கல்வி நிலையங்கள், மாணவர்களை ஓய்வின்றிச் செயற்படும் நிலையை ஏற்படுத்தியுள்ளன. அவர்களது திறமைகளை வெளிக்கொணரும் நிலையை மழுங்கடித்துவருகின்றன. ஒரு மாணவனின் ஆற்றல் கல்விதான் என்பதை உணர்த்தி அவர்களை உள்வாங்கிவருகிறார்கள். இந்நிலையை மாற்றி, அவர்களுக்கு ஓய்வுநேரங்களில் தன்னைப் பற்றியும், தேச விடுதலை பற்றியும் சிந்திப்பதற்காக விடுதலைப் புலிகள் தனியார் கல்வி நிலையங்களைத் தமது பணியை மட்டுப்படுத்தி, மாணவர்க்கு ஓய்வு கொடுக்குமாறு கோரியுள்ளோம்'' என்றார்.

கூட்டத்தில் பலரும் உரையாற்றினர். (12)

## மே. ஜேர்மனியில் வீதி விபத்து 7 பேர் பலி

(பொன்)

மேற்கு ஜேமனியில் பிராங்போர்ட் உட்பட மூன்று இடங்களில் ஏற்பட்ட வீதி விபத்துக்களில் இருநூற்றுக்கு மேற்பட்ட கார்கள் சேதமடைந்தன

இவ்விபத்துக்களில் ஏழுபேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

## இறைச்சி விலைகள்

(மன்னார்)

மன்னாரில் இறைச்சி விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. மன்னார் நகரத்தில் ஒருகிலோ மாட்டுறைச்சி 35 ரூபாவாகவும், ஆட்டிறைச்சி 60 ரூபாவாகவும், மன்னார் நகரத்துக்கு வெளியே ஒரு கிலோ மாட்டுறைச்சி 32 ரூபாவாகவும், ஆட்டிறைச்சி 50 ரூபாவாகவும் விற்பனை செய்யுமாறு மன்னார் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் கட்டுப்பாடு விதித்துள்ளனர். (ம)

## இன்று இல்ல விளையாட்டுப் போட்டி

(நமது நிருபர்)

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி, இன்று பிற்பகல் 1-00 மணிக்கு வித்தியாலய அதிபர் திரு. மு. கந்தையா தலைமையில் நடைபெறும். இப்போட்டியில் யா/கனகரத்தினம் மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். இராமலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

## அப்பியாசக் கொப்பி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொப்பிகள் கையிருப்பில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதுவரை சுமார் நான்கு கோடியே 38 லட்சம் அப்பியாசக் கொப்பிகள் நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டிருக்கின்றன.

மார்ச் மாதம் முதல் டிசம்பர் மாதம்வரை அப்பியாசக் கொப்பிகளைத் தயாரிப்பதற்கு 1,500 மெட்றிக் தொன் கடதாசி தேவைப்படுவதாகவும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

அப்பியாசக் கொப்பிகளை உற்பத்தி செய்யும் தனியார் உற்பத்தியாளருக்கு மாதம் 150 மெட்றிக் தொன் என்ற அடிப்படையில் கடதாசியை வழங்குவதற்கும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு மாசி மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81. Eelanadu P. O. Box No. 49. Telegram; Eelanadu. Telephone: 2291,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org